# பொருளடக்கம்


விஷயம் பக்கம்

1, நமது வைத்தியமும் பதிவுச் சட்டமும் — ஆசிரியர் 66
2. எமது சங்கத்துக்கு நன்கொடையளித்த ...அன்பர்கள் 68
3. வைத்தியச் செய்திகள் 69
4. சுரரோகநிதானம் 73
5. புற்றுரோகங்களுக்குச் சிகிச்சை 76
— வைத்தியர் வி. கனகசபை
6. சூதகசன்னி என்னும் ஹிஸ்ரீறியா 78
— வைத்தியர் ம. யோஸ் சின்னத்துரை
7. கக்குவானுக்கு அதிசயக்குளிகை எனும் புனுகுக்குளிகை 82
— வைத்தியர் த. இராசலிங்கம்
8. பி. சி. ஜி. மருந்தின் மர்மம் 83
9. முடக்குநோய் தீர முடக்கற்றான் — "சோமா" 85
10. திரிதோஷவிளக்கம் — வைத்தியர் M. P. P. M. இஸ்மாயில் 87
11. ...சில ஆராய்ச்சிக் குறிப்புகளின் விமர்சனம் 91
— வைத்தியர் வி. கனகசபை


## "வைத்தியன்"


கௌரவ ஆசிரியர்:

வைத்தியர் K. S. பரிபூரணநந்தர் அவர்கள்

கௌரவ உறுப்பாளர்கள்:

வைத்தியர் A. கனகரத்தினம் அவர்கள் (கொழும்பு)

,, M. S. சுந்தரம் ,,

,, V. கனகசபை ,,

,, A. S. இராசையா ,,

கௌரவ செயலாளர்:

,, S. A. இராசையா அவர்கள்.

"உடம்பினைப் பெற்ற பயனாவ தெல்லாம்
திடம்பட ஈசனைத் தேடு"

# வைத்தியன்

— திங்கள் வெளியீடு —

| மலர் 2 | விகிர்தி ஆண்டு மார்கழித் திங்கள் | இதழ் 3 |
| --- | --- | --- |

## நமது வைத்தியமும், பதிவுச் சட்டமும்

ஆசிரியர்

ஏனைய தேசத்தவர்களைக்காட்டிலும் தமிழர் பலவிதகலைகளிலும் நாகரீகத்திலும் பழமையானவர்கள் என்பது நிரூபிக்கப்படலாயிற்று. தமிழரின் பெருமையை நிலைநாட்டிய கலைகளுள் நம் வைத்தியமும் ஒன்றாகும். சீனா, அரேபியா, ஜெர்மனி முதலான இடங்களுக்கு அக்காலத்தில் நம் வைத்தியம் பண்டமாற்றுப்பண்ணவந்த மேலைநாட்டவர் மூலம் பரவலாயிற்று. அத்தோடமையாது நம் பெரும் வைத்திய பண்டிதர்களையும் அத்தேயத்தரசர்கள் தங்கள் அரண்மனை வைத்தியர்களாயும் அழைத்து அமைத்துக் கொண்டனர். மேலும் தங்கள் மொழிகளில் இவர்களின் உதவி கொண்டு வைத்திய நூல்களும் பல இயற்றலாயினர். மேற்கூறப்பட்ட விஷயங்களை விபரமாகத்தக்க ஆதாரங்களுடன் பி. சி. றேய் அவர்கள் எழுதிய 'இந்துக்கெமிஸ்ரி' இந்திய இரசாயனம் என்ற நூலில் பரக்கக் காணலாம். இத்தகைய சிறப்புடன் விளங்கிய நம் நாட்டுப் பழமைமிக்க வைத்தியம் மேலைநாட்டவரின் ஆட்சியின் கீழ் அடியோடு அழிக்கப்பட்டு ஆதரிப்பாரற்று மறைந்து மங்கின. பரம்பரை வைத்தியர்களாயிருந்தவர்களும் கதி வேறில்லாது பல்வேறு தொழில்களைச் செய்து காலத்தைப் போக்கினர். ஆங்கில வைத்தியத்தில் தீர்க்கப்பட முடியாத சில நோய்கள் காரணமாய் சில வைத்தியர்கள் அந்நோய்களைக் கவனித்து வந்தனர். இதன்மூலம் பொது மக்களும் தம் பண்டைய வைத்தியத்தின் பெருமையை அறியலாயினர்.

---

(பொழிப்புரை):- சரீரத்தைப் பெற்ற பிரயோசனம் முற்றிலும் சதாசிவனை நிச்சயத்துடன் ஆராய்ந்து அறிதலாம்.

இவ்வித நிலையிலிருந்து இப்பொழுது நம் நாடு விடுதலைபெற்ற காரணமாய் நம் வைத்தியமும் ஒரு அளவில் தனக்குரிய சுதந்திரத்தை அடைய ஆவற்படுகிறது.

இப்பொழுது நம் அரசாங்கம் நமது சுதேச வைத்தியத்திற்கும் ஒரு சொற்ப தொகையைச் செலவிடமுன் வந்திருப்பது போற்றத்தக்கதே. விரைவில் சுகாதார மந்திரி கனம் S. W. R D. பண்டாரநாயக்கா அவர்கள் கொழும்பில் ஒரு பெரிய பொது மருந்துச்சாலையைப் பல லெட்சம் ரூபா செலவில் நிறுவப்போகிறார்கள். கண்டி, காலி, யாழ்ப்பாணம் முதலிய முக்கிய இடங்களில் சுதேச வைத்திய ஆஸ்பத்திரிகளும் திறக்கப்படவிருக்கிறது. இதை நம் சாவகச்சேரி பிரதிநிதி ஸ்ரீமான் வி. குமாரசாமி அவர்களும் முன்பு பாராளுமன்றத்தில் பிரேரித்திருப்பதும் போற்றத்தக்கதே.

இவற்றையெல்லாம் உத்தேசித்து முதல் முதலாவதாக அரசாங்கம் இலங்கையிலுள்ள சகல சுதேச வைத்தியர்களையும் பரிசோதித்து உண்மையாக உள்ள வைத்தியர்களைப் பதிவுசெய்யப் போகிறது. அப்பதிவு பெற்ற வைத்தியர்களே இனி வைத்தியம் செய்யமுடியும்.

இந்தப்பதிவு 1949-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 24-ம் திகதி நிறைவேறிய 49-ம் இலக்கத்தை உடைய திருத்தச் சட்டத்தின் கீழ் நடத்தப்படும். சகல வைத்தியர்களையும் இரண்டு இடாப்பில் பதிவு செய்யப்படும். ஒன்று பொதுஇடாப்பு மற்றொன்று விசேஷ இடாப்பு. இந்த இரண்டு இடாப்புகளைப் பற்றிக் கூறும் சட்டம், 1941-ல் 17-ம் இலக்கத்தையுடைய பதிவுச் சட்டத்தின் 8-ம, 9-ம் பந்திகள் திருத்தப்பட்டு அவற்றின் கீழுள்ள 'ஏ, பி, சி' என்னும் பிரிவுகளின்கீழ் இவ்விபரங்கள் ஆங்கிலத்தில் காணப்படுகின்றன. இதனை நம் அநேக வைத்தியர்கள் அறியமுடியாதவர்களாய் இருப்பதனால் நம் அ. இ. சித்த ஆயுள்வேத வைத்தியசங்கம் தமிழில் மொழிபெயர்க்க உத்தேசித்துள்ளது. வைத்தியர்கள் அனைவரும் இவற்றைப்பெற்றுத் தமது பதிவைப்பற்றிய சட்ட நுட்பங்களை அறிந்துகொள்ளுதல் வேண்டும். இத் திருத்தச்சட்டத்தின் ?-ம் இலக்கம் 4-ம் பந்தியில் அபினி லைசென்ஸ் மட்டும் பெற்றுக்கொண்ட ஒரு காரணத்துக்காக அவரை வைத்தியராகப் பதிந்துகொள்ளப்படமாட்டாதென்று காணப்படுகிறது. இதுபோன்ற பல விபரங்களையும் அச்சட்டத்தைப் பெற்றுப் படித்து அறிந்துகொள்ளவேண்டுமென்று விரும்புகின்றோம்.

## எமது சங்கத்துக்கு நன்கொடை அளித்த வைத்திய அன்பர்கள். (முன் தொடர்ச்சி)

| | |
|---|---|
| சின்னத்தம்பி பொன்னையா, மிருசுவில் | 5-00 |
| பொ. செல்லையா, கந்தர்மடம் | 5-00 |
| V. சோமசுந்தரம், சுதுமலை, மானிப்பாய் | 5-00 |
| சதாசிவம் செல்லையா, திருநெல்வேலி கிழக்கு | 5-00 |
| P. R. பொன்னுத்துரை, உரும்பராய் | 10-00 |
| சிதம்பரம் விஞசித்தம்பி, வழலாய், அச்சுவேலி | 5-00 |
| இராமலிங்கம் வேலுப்பிள்ளை, களபூமி, காரைநகர் | 5-00 |
| K. மயில்வாகனம், ஆரியர்மடம், ஆனைக்கோட்டை | 10-00 |
| சீ மாம்பிள்ளை மேரி யோசேப், மாதகல், பண்டத்தரிப்பு | 5-00 |
| த செல்வத்துரை, 5, செம்மணிரோட், வண்ணார்பண்ணை | 10-00 |
| க. கனகசபை, பிள்ளையார் கோவிலடி, மண்டைதீவு | 5-00 |
| சின்னர் ஐயம்பிள்ளை, வேலணை கிழக்கு | 10-00 |
| ப. வீரசிங்கம், மீசாலை தெற்கு | 5-00 |
| க. ஆசையனுர், வழலாய், அச்சுவேலி | 10-00 |
| S. இராமலிங்கம், இணுவில் | 5-00 |
| V. சோமசுந்தரம், சரவணை, வேலணை | 2-00 |
| மு. கதிரவேலு, அகத்தியர் சுகமுனி வைத்யசாலை, வேலணை கி. | 5-00 |

### கீழ்க்கண்ட பெயர்கள் முன்இதழில் விடப்பட்டவை:

| | |
|---|---|
| A. K. குமாரசாமி, வட்டுக்கோட்டை | 10-00 |
| த. சோமசுந்தரம், ஸ்ரேஷன்ரோட், சாவகச்சேரி | 5-00 |
| சின்னத்தம்பி சிதம்பரம், சங்கானை கிழக்கு | 5-00 |
| சி. கந்தையா, நவாலி வடக்கு | 10-00 |
| M. புண்ணியமூர்த்தி, மாதகல் | 3-00 |
| S. இராஜசேகரம், காரைநகர் | 5-00 |
| ஈ. மார்க்கண்டு, கரவெட்டி மேற்கு | 2-00 |
| M. S. அந்தோனிப்பிள்ளை, நெடுந்தீவு மத்தி | 3-00 |
| ச. வேலுப்பிள்ளை, அனலைதீவு | 5-00 |
| கு. கணபதிப்பிள்ளை, மிருசுவில் | 3-00 |
| த. பொன்னையா, இருபாலை, கோப்பாய் | 5-00 |
| ம. சூசைப்பிள்ளை, புங்குடுதீவு | 5-00 |

### கீழ்க்கண்டவை முன்இதழில் ஏற்பட்ட பிழை திருத்தம்:

| | |
|---|---|
| Dr. K மயில்வாகனம், 'குணம் வில்லா' வல்வெட்டித்துறை | 25-00 |
| வே. செல்வத்துரை, கொடிகாமம் | 5-00 |
| N. T. S. N. முருகேசபிள்ளை, கச்சேரியடி, யாழ்ப்பாணம் | 10-00 |
| சே. சின்னத்தம்பி, கைதடி வடக்கு, சாவகச்சேரி | 10-00 |

# வைத்தியச் செய்திகள்

## வைத்தியர்களைப் பதிவுசெய்ய ஏன் சுணங்குகிறது?

அங்கீகரிக்கப்பட்ட வைத்திய கலாசாலைகளிலிருந்து பட்டம் பெறாத சுதேச வைத்தியர்களைப் பதிவு செய்வதற்கென கௌரவ சுகாதார மந்திரியால் கடந்த மே மாதம் நியமிக்கப்பட்ட பதிவுக் கமிட்டியின் அங்கத்தவர்கள் கூட்டம் ஒன்று சென்ற டிசம்பர் மாதம் 20 ந் திகதி மேற்படி பதிவுக் கமிட்டி அங்கத்தவர்களில் ஒருவராகிய வைத்தியர் **G.** ஒவிற்றிகலை அவர்களால் கூட்டப் பட்டது. ஷெ கூட்டத்துக்கு தமிழ் பிரதிநிதிகள் இருவரில் ஒரு வராகிய வைத்தியர் **K. S.** பரிபூரணாநந்தர் அவர்கள் பிரசன்னமா யிருந்தார். சுதேச வைத்தியர்கள் பதிவுக் கமிட்டியை இதுவரை கூட்டாமலும், அதனை ஆலோசிக்காமலும், அக்கமிட்டியின் தலை வர் டோனல்ட் ஒபயசேகரா அவர்கள் தனிப்பட்ட முறையில் கமிட்டியின் அலுவல்களை நடத்திவருவதாகவும், அப்படி நடப்பது ஒழுங்குக்கு மாறு என்பதாகவும், கமிட்டியை ஆலோசியாது தலை வர் தன் எண்ணப்படி நடப்பதாயிருந்தால் கமிட்டி மெம்பர்கள் ராஜீநாமா செய்யவேண்டுமே தவிர வேறுவழியில்லையென்றும் பேசிக்கொள்ளப்பட்டது. பலத்த வாக்குவாதத்தின் மேல் வைத் தியர் **K. S** பரிபூரணானந்தர் அவர்களால் திருத்தப்பட்ட பிரேரணை யொன்று கூட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டு சுகாதார மந்திரிக்கும், பதிவுக் கமிட்டித் தலைவருக்கும் அனுப்பப்பட்டது.

## பதிவுக் கமிட்டியின் முதற் கூட்டம்

சுதேச வைத்தியர்களின் பதிவுக் கமிட்டியின் முதலாவது கூட்டம் ஜனவரி மாதம் 10-ந் திகதி பதிவுக் கமிட்டியின் தலை வரால் கூட்டப்படுகிறது. ஷெ முதல் கூட்டத்தில் வைத்தியரா கப் பதிவதற்கு விண்ணப்பித்திருக்கும் வைத்தியர்களில் 20 பேர் களை மட்டும் பரீக்ஷிக்கப் படுமென்றும், மிகுதி வைத்தியர்களை எவ்விதம் பரீக்ஷிப்பது எவ்விடத்தில் கூப்பிடுதல்வேண்டும் என்னும் விஷயங்கள் ஆலோசிக்கப்படும் என்றும் அறிகிறோம். ஷெ இரு பது வைத்தியர்களும் ஊவாமாகாணத்தைச் சேர்ந்தவர்களாவர்.

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| சு. அத்தனுசியார், சில்லாலை, பண்டத்தரிப்பு | 10-00 |
| காசிப்பிள்ளை சிவசாமி, நல்லூர் மார்க்கெட் | 5-00 |

[நன்கொடை தந்துதவிய வைத்திய அன்பர்கள் தங்கள் பெயர் இது வரை 'வைத்திய'னில் பிரசுரிக்கப்படாமலிருந்தால், அல்லது ரசீது கிடை யாமல்இருந்தால் வைத்தியர் க. வேலாயுதபிள்ளை, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம்'' என்ற விலாசத்துக்கு எழுதவும். — சங்கத் தனாதிகாரி

## கொழும்பில் பொதுமருந்துச்சாலை நிறுவப்படுகிறது

அரசாங்கம் முதல் முதலாக இப்பொழுது ஒரு பொது மருந்துச்சாலையைக் கொழும்பில் நிறுவ ஏற்பாடு செய்திருக்கிறது. கொழும்பு நகரசபை எல்லைக்குள் இதற்கு வேண்டப்படும் நிலத்தையும் தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. இப்பொது மருந்துச்சாலை பல லெக்ஷம் ரூபா செலவில் ஸ்தாபிக்கப்படவிருக்கிறது. இதில் ஆயுள்வேத சாஸ்திர முறைப்படியுள்ள சகல மருந்துகளும் சித்த வைத்திய முறைப்படியுள்ள சகல மருந்துகளும் யூனனி முறைப்படியுள்ள சகல மருந்துகளும் தயாரிக்கப்பட்டு வைக்கப்படும். இலங்கையின் முக்கிய இடங்களாகிய கண்டி, காலி, யாழ்ப்பாணம், கொழும்பு ஆகிய இந்த இடங்களில் பல சுதேச வைத்தியசாலைகள் திறக்கப்படவிருக்கிறது. அங்ஙனம் திறக்கப்படும் வைத்தியசாலைகட்கு இப்பொது மருந்துச்சாலையிலிருந்து வேண்டிய மருந்துகள் விநியோகிக்கப்படும்.

இப்பொது மருந்துச்சாலையை நடத்துவதற்கு 'ஔஷத சம்ஸ்காரசபை' என்று ஒரு சபை சுகாதார மந்திரியால் நியமிக்கப்பட்டிருக்கிறது. இச் சபையில் சித்த வைத்திய பகுதிக்காக வைத்தியன் ஆசிரியர் கே. எஸ். பரிபூரணாநந்தர் அவர்கள், வைத்தியர் எம். கதிரவேற்பிள்ளை அவர்கள், வைத்தியன் செயலாளர் வைத்தியர் எஸ். ஏ. இராசையா அவர்கள் ஆகிய மூவரையும் நியமிக்கப்பட்டிருப்பதாய் அறிகிறோம். அரசாங்கம் யாழ்ப்பாணத்திலுள்ள அ. இ. சித்த ஆயுள் வேத வைத்திய சங்கத்திலிருந்தே மூவரையுந் தெரிந்தெடுத்திருப்பது இச் சங்கத்தின் அரும் பெருந் தொண்டுகளை அரசாங்கம் நன்கு மதித்துக்கொண்டதனாலென்க.

---

(93-ம் பக்கத் தொடர்ச்சி)

அகத்தியம் தொல்காப்பியம் முதலிய நூல்கள் முறையே அகத்தியன் தொல்காப்பியன் முதலியோராற் பெயர்பெற்று வழங்குவனவாயும் அவர்களாற் செய்யப்பட்டனவாயும் உள்ளனவோ அங்ஙனமே இதுவும் என்றபடி) [திருஷ்டாந்தம்]" என்பதே நண்பரது அநுமானம்.

இவ்வநுமானத்தின் கண்ணே சாத்தியமானது குறித்த ஒருவனாற் செய்யப்பட்ட தன்மை. சாதனமானது அவனது பெயராற் பெயர் பெற்று வழங்குதல் இச் சாதன சாத்தியங்களுக்கு வியாப்தி இன்றாதலின், இச் சாதனம் குறித்த சாத்தியத்தைச் சாதிக்க வலியற்றதாகும், வியாப்தியாவது சாதன சாத்தியங்களின் நியதமான உடனிகழ்ச்சியாதலின், சாதனம் வியாப்பியமாயும் சாத்தியம் வியாபகமாயும் இருத்தல் வேண்டும். (அஃதாவது சாதன முள் வழியெல்லாம் சாத்தியமிருந்தே தீருதல் வேண்டும் என்றபடி) ஈண்டுக்

கூறப்பட்ட சாதனமாகிய ஒருவன் பெயராற் பெயர் பெற்று வழங்குதலை உடைய நூல்களிலெல்லாம் அவனாற் செய்யப்பட்டதாந் தன்மை உண்டு என்று கூறப்படுவதாகிய வியாப்தியில்லை. ஏனெனில், சாதவாகனம் இளந்திரயம், செகராசசேகரமாலை, வச்சணந்திமாலை போன்ற நூல்களில் குறித்த ஒருவர் பெயராற் பெயர் பெற்று விளங்குதலாகிய சாதனமிருக்கவும் அவற்றில் அவராற் செய்யப்பட்ட தன்மையாகிய சாத்தியம் இன்றாதலின் என்க. [சாதவாகனம் முதலியன சாதவாகனன் முதலியோராற் செய்விக்சப்பட்ட நூல்கள் என்றறிக] ஆகவே, வியாப்தியில்லாத இவ்வேது குறித்த சாத்தியத்தைச் சாதிக்கும் வலியற்றதாதல் காணப்படுதலின், நண்பர்கூறிய அவரது அனுமானம் போலியாதலைக் காண்க.

செய்விக்கப்பட்டோனாலும் நூல்கட்குப் பெயரிடலாம் என்பது "முதனூல் கருத்தன் அளவு மிகுதி. பொருள் செய்வித்தோன் தன்மைமுதல் நிமித்தினும் இடுகுறியானும் நூற்கெய்தும் பெயரே" என்ற நன்னூற் பாயிரச் சூத்திரத்தானும் 'செய்வித்தோனாற் பெயர் பெற்றன, சாதவாகனம் இளந்திரையம் முதலாயின" என்ற மயிலைநாதருரையானும் அறியக்கிடப்பதாம். நூலுக்குப் பெயர் செய்தோனாலும் இடப்படுமென்பதை யாம் அறியாமலில்லை. ஆனால் யாம் காட்டிய ஏனைய பல ஏதுக்களோடு இணைத்துப் பார்க்குமிடத்து. பரராசசேகரம் என்ற பெயர் செய்தோனது பெயராற் பெற்ற பெயரன்று. செய்வித்தோன் பெயராற் பெற்ற பெயர் என்று கோடலே பொருத்தமாகக் காணப்பட்டமையால் இப் பத்திரிகையில் யாம் முன்னெழுதிய ஆராய்ச்சிக் குறிப்பில் 341-ம் பக்கத்து 2-ம் பந்தியில், பரராசசேகரம் என்ற பெயர் செய்வித்தோன், பெயராற் சூட்டப்பட்ட பெயர் என்றும். செய்தோன் பெயராலும் நூலுக்குப் பெயர் இடப்படுமென்பதை யாம் அறிவோம் என்பது ஆண்டுநாற் பெயரமைக்குங் காரணங்களுள் ஒன்றாகச் செய்தோனையும் உடன் வைத்துக் கூறியதனாற் காண்க. இவ்வாறெல்லாம் யாம் விரிவாக விளக்கியிருப்ப அவைகளை நண்பர் விளங்காமையாலோ பிறிது காரணத்தாலோ 2-ம் மலர் 10-ம் பக்கத்தின் 2-ம்பந்தியிறுதியில் "அப்படியாயின் நூலாசிரியர் பெயர்கொண்ட முன்காட்டியவும் பிறவுமாகிய எல்லா நூல்களுக்கும் தேடவேண்டுமன்றோ? பெரிய இலக்கண இலக்கிய காப்பியங்களையெல்லாம் பேரறிஞர்கள் ஒப்புக்கொண்டிருக்க..." என்றார். இக்கூற்றால் யாம் அகத்தியம், தொல்காப்பியம் போன்ற நூல்களைச் செய்தோனாற் பெயர்பெற்றவை யென்பதை ஒப்புக்கொள்ளாமலும், செய்தோனால் நூற்குப் பெயர் எய்தாம் என்பதை அறியாமலும் முந்திய கட்டுரையில் எம் அபிப்பிராயத்தை எழுதிவிட்டோமென்பதைச் சொல்லாமல் சொல்லி வாசகர்களை மயங்கவைத்தார் என்று எண்ண இடமாகாதோ? வாசகர்களே ஆலோசியுங்

கள். இங்ஙனமே நண்பருடைய ஆராய்ச்சி முழுதும் யாம் காட்டிய ஆதாரங்களுக்குத் திரிபுபட தாம் கருத்தும் பொருளுங்கொண்டு காட்டி வாசகர்களை மயங்கவைத்ததேயன்றி இவரது கொள்கைக்கு ஏதும் தக்க பிரபலமான அகச்சான்று, புறச்சான்று காட்டி நிறுவிச் செல்லுகின்றதா? நோக்குங்கள்.

நண்பர் தமது கட்டுரையில் "பரராசசேகரனாற் செய்யப்பட்டதெனக் குருசீட முறையாக நாம் அறிந்துள்ளோம்" என்ற ஏதுக் காட்டி அவ்விதமான தங்கொள்கையைநாட்ட முன்வந்தார். அந்த ஏதுவின் பலாபலத்தை (வன்மை மென்மைகளை) ப் பற்றியாராய்வாம்.

'பரராசசேகரம் பரராசசேகரனாற் செய்யப்பட்டது' என்பது ஒருசாரார் ஒப்புக்கொண்டு கூறும் கர்ணபரம்பரை வழக்கேயன்றி எல்லார்க்கும் ஒப்பமுடிந்த ஒருவழக்கன்று பரராசசேகர நூலுக்குப்பின் இன்றுவரை நூல்செய்த ஆசிரியர்களுள் எவராவது தமது நூலுள் அங்ஙன் கூறிய சான்று ஏதும் உண்டா? இதுபோலவே எத்தனையோ கர்ணபரம்பரை வரலாறுகள் நூல்களைப் பற்றியும், நூலாசிரியர்களைப்பற்றியும், அரசர்களைப்பற்றியும் உலகில் வழங்கியதுண்டு. வழங்கியும் வருகின்றன. அவையெல்லாவற்றையும் உண்மையென்று கொள்ளல் சாலுமா? சில உண்மையாகலாம். சில பொய்யாகலாம். உதாரணமாக 'இப்பொழுதுள்ள திருக்கோவையாருரை நச்சினார்க்கினியரியற்றியது' என்பது குருசீடமுறையாக அறிந்துவந்த ஒரு கர்ணபரம்பரை வழக்கு. அதனை ஆதாரமாகக் கொண்டு திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை போன்ற அறிஞர் பலர் அவ்வாறே தாம் இயற்றிய செய்யுட்களிற் பாடியும் போந்தார்கள். ஆனால், அது பின்பு சபாபதி நாவலர் போன்ற அறிஞர்களால் தக்க சான்றுகள் காட்டி மறுக்கப்பட்டுப் பொய்யாய்ப்போக 'திருக்கோவையாருரை பேராசிரியரியற்றியது' என ஆராய்ச்சியிற் கண்ட முடிபே இப்பொழுது அறிஞர்களாற் கொள்ளப்படுகின்றது. ஆகவே நண்பர் 'குருசீடமுறையாக அறிந்துள்ளோம்' என்ற ஒருசார் கர்ணபரம்பரை வழக்கை ஆதாரமாகக்கொண்டு நாட்டவந்த அவரது கொள்கை தக்க பிரபலமான வேறு சான்றுகளின்றி வலியுறுவதெப்படி? அவர் தமது ஆராய்ச்சிக் குறிப்பிற் காட்டிய பிற காரணங்களால் வலியுறும் என்பரேல் அவற்றைப்பற்றி இனி ஆராய்வாம். (தொடரும்)

[பரராசசேகரன் நூல் செய்தமையைப்பற்றி ஆராய்வான் வேண்டி எழுந்த சிறு கட்டுரை வைத்தியர்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ நோயணுகா வழிகளைக் கற்பியாது இலக்கியத்துறையில் இறங்கி அத்துறையில் விரிவுபெறுகிறது. ஆதலால் மிசாற்பபக்கங்களைக்கொண்ட 'வைத்தியன்' இன் அதிக பக்கங்களை இனி இவ் இலக்கிய ஆராய்ச்சிக்கு விட்டுக்கொடுக்க இயலாமைக்கு வருந்துகிறோம். — ஆசிரியர்]

# சுரரோக நிதானம்

[விளக்கப் பொழிப்புரையுடன் கூடியது]

இஃது அகில இலங்கைச் சித்த ஆயுள்வேத வைத்திய சங்கத்தின் முதலாவது வெளியிடு.

O

## 4-வது சிலேற்பன தொந்த அதிசாரசுரம்

இக்குணங்க ளுண்டாகி யசறு கக்கி
யிருமலுட னிரைப்புமா யிளைப்புமாகி
ஒக்கவதி சாரமாய்ச் சேற்பங் கட்டி
யரைக்குக்கீழ்க் குளிர்ந்திருக்கு முரமுங் காயும்
அக்கிமிகுந் தோண்டை கட்டும் பிரமை தாக
மையடைத்துச் செருமிவிடு மசாத்தி யத்தில்
புக்குணர்ந்து தேர்ந்தறிந்தங் குணர வல்லார்
பொருவிலா வுபநிடதம் போற்று வாரே.

(பொ-ரை):- முற்கூறிய குணங்களுடன் தொண்டையிற் சேற்பம் கட்டி இருமலுண்டாகி அசறுடன் சளியைக் கக்கி, இரைப்பு இளைப்புத் தோன்றி வயிறு கழிந்து அரைக்குக் கீழுள்ள அவயவங்கள் குளிர்ந்து மார்பு முதலியவிடங்களில் அதிக சுரமுண்டாகும். இவற்றோடு உள்ளுறுப்புகளில் அவியல், அழற்சி, மயக்கமோடு மிகு தாகமுங் காணும். அன்றி இடையிடையே நெஞ்சடைத்து வேதனையுஞ் செய்யும். இவ்வேதனை செருமினாற் சிறிது சுகமுண்டாகும். இது சிலேற்றுமதோஷமதிகரித்துப் பிறதோஷத்துடன் கூடியுண்டாகும். அசாத்தியமுள்ள சிலேற்பன தொந்த அதிசாரசுரமெனத் தேர்ந்தறியும் வல்லோர்களான வைத்தியர்களை, ஒப்பற்ற வேதத்தின் ஞானகாண்டப் பொருளைக் கூறும் உபநிடதங்கள் போற்றிப் புகழுமென்க.

(விளக்கம்):- இதற்கு முன்கூறிய சிலேற்பன மாங்கிச அதிசார சுரத்திற்கும் இதற்குமுள்ள பேதம் யாதோவெனில்: அது சிலேற்றும தோஷமதிகரித்துப் பதனழிந்த மாங்கிஷம் போன்ற தன்மையுடன் கழிச்சல் காணும். இது சிலேற்பனம் பெரும்பாலும் பித்தத்துடன் தொந்தித்து உண்டாகி, வாய் முதற் குதமீறுகவுள்ள உறுப்புகளை விரணமுறச்செய்து கழிச்சலுண்டாக்கும். இச்சுரத்தினைப் பிறவிடங்களில் அக்கர சுரமெனக் கூறுவர். இது ஈற்றில் வாததோஷத்துடன்கூடி வயிறுபொருமல் முதலிய துர்க்குணங்களுண்டாகில் அபாயமுஞ் செய்யும்.

## 5-வது சிலேற்பன நீருதிரிச்சுரம்

வெதும்புசுர முழற்றுதலே பரிதா பங்கள்
விக்கல் சத்தி யிளைப்பிருமல் மோகம் வீக்கம்
விதம் பெறவே வயிறுழுத லல்லான் மேலே
விசிறுதனீ ரேபெருத்து வெடித்தங் கோடல்
இதம் பெறுநாக் கறுத்திளைத்த லெல்லாங் கண்டா
லிக்குணங்க ளசாத்தியமா மென்னக் கண்டு
பதம் பெறவே யுரைசெய்தா னுமையாட் கீசன்
பழையமறைப் பொருளதனைப் பரிந்து தானே.

(பொ-ரை):- வெப்பமாகச் சுரங்காயும். உடம்புழற்றும். விக்கல், சத்தி, இளைப்பு, இருமலுண்டாகும். நோயாளி மிகவும் பரிதாபப் படுவான். அவயவங்களிலுள்ள தோலில் நீர்கோத்து வீக்கமுண் டாகி வெடித்து நீர்வடியும். வயிறிரையும். நாக்கு நற்சுவையற்றுக் கருநிறமடையும் இதன்பின் உடம்பு மெலியும். இத்தகைய குணங் களுடைய சுரத்திற்கு, உயிர்கட்கின்பமருளுமிறைவன் உமாதேவி யார்க் கருளிச்செய்த ஆயுள்வேதத்தில் அசாத்தியமுள்ள சிலேற் பன நீருதிரிச்சுரமெனப் பெயர் கூறியருளினரெனவறிக.

### சிலேற்பன கணசுரம்

காய்ந்து காய்ந்து வயிறிழியுங் கண்ணுந் தளர்ந்து குழிந்திருக்கும்
வாய்ந்த நாவு மிக வெடித்துப் புண்போ லுறு மசறுசுக்கும்
ஏய்ந்து முலையாய் கைகால்கள் வெச்சேயின்றிக் குளிர்ந்திருக்கும்
ஆய்ந்து கொள்ளு மிக்குணங்க ளடைவாஞ் சேற்ப கணசுரமே

(பொ-ரை):- உயர்ந்த தனபாரங்களையுடையவளே! சுரம் மிக வேகமாகக் காயுந்தொறும் வயிறு அதிகமாகக் கழியும். கண்கள் தளர்ச்சியடைந்து குழிவிழும். நாக்கு வெடித்துப் புண்ணு கித் துர்நாற்றமுடன் அசறுகக்கும். கைகால் குளிரும். இக்குணங் களுடைய சுரத்தை நீ அசாத்தியமுடைய சிலேற்றும கணசுரமென ஆராய்ந்து அறிந்துகொள்ளுக.

### சிலேற்பன பிரதாபசுரம்

காய்ந்துகாய்ந் தத்தியுறு மூளை யெல்லாங்
கரைந்துகரைந் துருகிவிழுங் கருகி நீரும்
தீய்ந்துவிடு மலமுகமு முடலெலண் சாணுஞ்
செறி பொருத்துத் தோறமுளையும் புதைய வீங்கும்
ஆய்ந்தொருசா லிரத்த முட னீரும் பாயு
மதிசார மிளைப்பிரும லாகம் வற்றித்
தேய்ந்துவிடு மிக்குணங்க ளசாத்தி யத்திற்
சேற்பபிர தாபசுர மென்று செப்பே.

(போ-ரை):- உடம்பிற் சுரவேகமதிகரித்து நாளடைவிலே என் பினுள்ளிருக்கும் மச்சையைப்பற்றி அதையுருகச்செய்து சலப் பைக்கு வந்து சலத்துடன் கருநிறமாய் வெளிப்படும். அபானம் வரட்சியடையும். எண்சாணளவான உடம்பிற் செறிந்துள்ள பொ ருத்துக்கள் ஊளந்து நோவும் வீக்கமும் உண்டாகும். அவ்வீக்கத் தில் விரல்நுனியால் அமர்த்திப்பார்த்தால் பள்ளமுண்டாகி, அப் பள்ளம் நெடுநேரம் மறையாமலிருக்கும். இடையிடையே சலத் தோடு இரத்தமுங் கலந்து வெளிப்படும். அதிசாரம், இளைப்பு, இரு மல் தோன்றும். இத்தகைய குணங்களுள்ள சுரத்தை அசாத்திய முள்ள சிலேற்பனப் பிரதாபசுரமெனக் கூறுக.

(வி-ம்):- இச்சுரத்தின் வேகத்தால் என்புகளும், மச்சையென் னும் நெய்த்தன்மையுள்ள மூளைப்பொருளும் உருகிக் கரைந்து சலப்பைக்குள் வந்து சலத்துடன் கலந்து வெளிப்படும். இந் நோ யாளியின் சலத்தை ஒரு வர்த்தியில் நனைத்துக் கொழுத்தினல் அது விளக்குப்போல் எரியும். இச்சுரத்தைப் பிறநூலார் மச்சா தாதுகத சுரமெனக் கூறுவர்.

### சிலேற்பன சோகசுரம்

சுரத்திற் சேற்பமுந் துன்னு மிருமலுந்
பொருத்துத் தோறு முளைவும் புலம்பலும்
வருத்துந் தாக மதிலுறு காசமும்
உரைத்த சேற்பத்திற் சோக சுரமிதே

(போ-ரை):- சுரத்தினேடு சிலேற்றுமம் அதிகரித்து இருமலுண் டாதலும், உடம்பிலுள்ள பொருத்துக்களில் உளைவு மிகுந்து நோ யாளி புலம்புதலும், அதிகதாகம், களை, கோழையுண்டாதலுமாகிய சுரம் சிலேற்பனசோகைச் சுரமெனப் பெயர்பெறும்.

(வி-ம்):- இச்சுரத்தில் நோயாளி அதிகமாகக் களைப்படைவதால் இது சோகச்சுரமெனப் பெயர்பெற்றது. சோகம் = களை.

### சிலேற்பன சோகைச்சுரம்

பிரமைதாகமு மோகம் பிதற்றலும்
அரமும் போலடி நாக்குக் கறுத்தலும்
கரமுங்காலுங் கனத்துத் தடித்தலும்
தரவுஞ் சேற்பன சோகைச்சுரமிதே

(போ-ரை):- மயக்கம், அதிதாகம், அறிவற்றுப்பேசுதல், அடி நாக்குக் கறுத்து அரம்போல் முள்ளுண்டாதல், கைகால் கனப் புடன் தடித்து வீங்குதல் ஆகிய குணங்களுடைய சுரத்தை ஆயுள் வேதம் சோகைச்சுரமென அறுதியிட்டுச் சொல்லும்.

(வி-ம்): சோபை என்னும் வடமொழிச்சொல் இங்கு சோகை என மருவியது. சோபை = வீக்கம். (தொடரும்)

# புற்றுரோகங்களுக்குச் சிகிச்சை

— வைத்தியர் வி. கனகசபை —

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

### காலாந்த கௌரிப் பதங்கம்

கெந்தகம், அரிதாரம், வெள்ளைப் பாஷாணம், கௌரி பாஷாணம், துருசு, வீரம், காந்தம், லிங்கம், பூரம், மனேசிலை, இவைகள் யாவும் சுத்தி செய்து வகைக்கு கழ-2 நிறுத்தெடுத்து 6-7 கோழி முட்டையின் வெள்ளைக் கருவுடன் எருக்கம்பால் சரி கலந்து வெய்யிலில் வைக்க, அது முறிந்து ஒருவகைச் செய நீராகும். இச் செய நீரினல் மேற்கூறிய 10 சரக்குகளையும் இரண்டு சாமத்திற்குக் குறையாமல் நன்ருயரைத்து ஒரு மூசையும், ஐந்தாறு துவாரமுள்ள மூடியுஞ் செய்து வெடியாமல் நிழலிலுலர்த்திப் 18 வகைத் தோஷங்களும் நீங்கிச் சுத்தி செய்த இரசம் அல்லது வாலை ரசம் 2 பலம் ஷெமூசையுள் விட்டு மூடியால் மூடிச், சந்திற்கு உளுத்தம் மாவைச் சிறிது சலம் விட்டுப் பிசைந்து பூசி இரண்டொரு சீலை செய்து வைத்துக் கொள்ளுக. பின், 4 படி கறியுப்பை யிடித்தோ அல்லது திரிகையிலரைத்தோ பொடிசெய்து ஒரு பெலமான அடி கனத்த பானையிலிட்டமுத்தி நடுவிலொரு பள்ளஞ் செய்து முன் பக்குவஞ் செய்த மூசையின் துவாரம் மேலிருக்கும்படி வைத்துப் பானையின் வாய்மட்டத்திற்கு உப்பிட்டமுத்திக் கையாந்தகரைச் சாறை உட்புறம் பூசிக் காயவைத்த ஒரு பொருத்தமான பானையால் மூடிச் சந்திற்கு ஏழுசீலை மண்செய்து உலர்த்தி வாலுகை அடுப்பில் வைத்துச் சிறு தீ, கமலவன்னி, காடாக்கினியாக முறையே நன்னான்கு சாமமாகப் 12 சாமமெரித்து நன்கு ஆறிய பின் இறக்கிப் பூமியில் ஒருக்கணித்துச் சாய்வாகப் பானையை வைத்து மண் சீலை நன்கு நனையும்படி நீர்விட்டுப் பிரித்து மேற் பானையிலிருக்கும் மருந்தினைப் பன்றிக்குச்சி அல்லது பிறஷினல் வழித்தெடுத்து அரைத்துக் கற்காக்குச் சீசாவிலிட்டுப் பத்திரப் படுத்தவும். தேன், நெய், இஞ்சி, பனங்கட்டி இவைகளை அனுபான மாகக்கொண்டு (அரையரிசிப்பிரமாணம்) உண்டுவரவும்.

**தீரும்நோய்:-** பலவகைப்புற்று, குட்டம், அரையாப்பு, சூலை, கூன்முடக்கு, காமாலை, புண், புரை, கண்டமாலை, வாதசம்பந்தமான கொடிய நோய்கள், கல்லடைப்பு, சிலேற்பன நோய்கள், மகோதரம், பீலி, கவுசி, பீனிசம், மந்தாரகாசம், வெட்டை முதலிய கொடும் பிணிகள் தீரும். இன்னும் இம் மருந்தினைப் பிரசவித்த பெண்களுக்கு, அழுக்குத்தங்கியுண்டாகுஞ் சந்நி முதலிய ரோகங்களில் கொடுக்க அவைகள் யாவுங் குணமாகும். சீதள சம்பந்தத்தினல் சிலேற்றுமதிகரித்துப் பிழைப்பதரிதெனத் தோற்றுங் காலத்தில் மருந்தின் அளவைக் கவனியாது சமயோசிதமாய்

அளவை அதிகப் படுத்திக் கொடுக்க, இதன் பெருக்கேற்ப நெருங்கி நின்ற காலனையுமோடச் செய்யும் வலிமையுள்ளது

குறிப்பு:- இம் மருந்தினை மண்டலக் கணக்கில் நோயாளிகளுக்குக் கொடுக்க வேண்டுமாயின் இதன் வேகத்தைச் சிறிது குறைத்துக் கொடுப்பது நல்லது. எங்ஙனமெனில், சுத்தி செய்த கெந்தகம், சீனக்காரம், வகை கழஞ்சு - 4 இவைகளைப் பொடி செய்து ஒரு புது ஓட்டைக் கரி நெருப்பிற் காயவைத்து ஷெ பொடியை யிட்டு உருகுஞ்சமயம் ஒரு சலாகையாற் கிளறி அது நீராகும்சமயம் பதங்கத்தில், 4கழஞ்சியினைப் பொடிசெய்து தூவிக் கிளறிக் கொடுத்துப் புகைய விடாது யாவும் உறவாகிக் கரு நிறமடைந்த பின் இறக்கிப் பொடி செய்து வைத்துக் கொண்டு நேரம் 1 முதல் 2- குன்றியிடை மேற்கூறிய அனுபானங்களிற் கொடுத்து வரவும். வாய் பிடிக்காது. [உருகும்போது புகை அதிகமாகப் போகாவிட்டால் மருந்து கெட்டுப் போகும். கவனமாகச் செய்ய வேண்டியது]

## குரு பதங்கம்

சுத்தி செய்த வீரம், ரசகர்ப்பூரம், லிங்கம், நவாச்சாரம், பூநீறு வகைக்குப் பலம் - 1. இவைகளைத் தனித்தனியரைத்துப் பின் ஒன்றுகூட்டி ஒருசாம நேரம் அரைத்து எடுத்துக் கொள்ளவும். இரண்டு குண்டுச்சட்டி யெடுத்து உராய்ந்து இடைவெளியின்றிப் பொருந்தும்படி செய்து 30 பலம் உப்பையிடித்து அரைவாசியுப்பைக் கீழ்ச்சட்டியிற் கொட்டி அழுத்தி அதன் மீது பொடி செய்த மருந்தைத் தூவிப் பரப்பி அதன் மேல் மற்றப் பாதியுப்பையும் கொட்டியழுத்தி மேற்சட்டியைக் கவிழ்த்து மூடிச் சந்து வாய்க்கு மண் பூசி ஏழுசீலை மண் செய்து உலர்ந்த பின் அடுப்பில் வைத்துத் தீபாக்கினி 1 சாமம், கமலாக்கினி 1 சாமம், காடாக்கினி 6 சாமம் ஆக எரித்து அடுபின் மீதே ஆறவிட்டு எடுத்து முன் முறைகளிற் கூறிய பிரகாரம் பதங்கத்தைப் பதனஞ் செய்து ஒரு பலம் பதங்கத்திற்கு ஒரு விராகனிடை காடிக்காரஞ் சேர்த்து நன்றுயரைத்து வைத்துக் கொள்ளவும்.

பிரமாணம்:- அரிசியிடை $\frac{1}{2}$ - 1

அனுபானம்:- பனங்கட்டி, ஏற்ற லேகியங்களிற் கொடுக்கவும்.

**தீரும் நோய்கள்:-** வன்புற்று, கன்னக்கிரந்தி, சிரசைப்பற்றிய நோய்கள், பலவகை வாதங்கள், சூலைகள், சூதக வாயு, கண்டமாலை, பக்கவாய்வு அண்டவாய்வு முதலிய நோய்கள் நீங்கும்.

சிலேற்பனமீறிக் குளிர்ந்து பிழைப்பதரிதெனக் கண்டால் இம் மருந்தில் 2-3, அரிசியெடை எடுத்துத் தேன் முலைப்பாலிற் கலந்து கொடுத்தால் சீதளம் நீங்குவதன்றிக் கண்டத்தையிறுக்கிய

# சூதகசன்னி என்னும் ஹிஸ்ரீறியா
## (HYSTERIA)

— வைத்தியர் ம. யோஸ். சின்னத்துரை —

"சுசீலா எங்கே?" என்று வகுப்பாசிரியை கேட்டாள். வகுப்பிலிருந்த மாணவிகள் ஒருவரிடத்திலிருந்தும் பதில் வரவில்லை. மாணவிகள் ஒருவரையொருவர் வெருண்ட பார்வையோடு பார்த்துக்கொண்டிருந்தார்கள். சிலர் காதுக்குள் ஏதோ 'குசுகுசு' வென்று பேசிக்கொண்டார்கள்.

ஒரு துணிவுள்ள மாணவி எழுந்து 'சுசீலாவுக்குப் பேய் பிடித்துவிட்டது" என்றாள்.

"என்ன! சுசீலாவுக்கா பேய் பிடித்துவிட்டது? யார் சொன்னது?" என்று கண்களை அகலவிரித்துக்கொண்டே ஆசிரியை கேட்டார்.

"நாங்கள் நேரில் பார்த்தோம். தலைமயிர்களையும், உடைகளையும் பிய்த்துக்கொண்டு பயங்கரமாகக் கூச்சலிடுகிறாள்; உரத்த சத்தமாய்ச் சிரிக்கிறாள்; பற்களை அவள் நெருமும்போது எங்கள் உயிரில் எங்களுக்கே நம்பிக்கையில்லாமல் இருக்கிறது. கைகால்களை முடக்கிக்கொண்டு நெஞ்சில் மோதுகிறாள்." என்று அந்த மாணவி அடுக்கிக்கொண்டே போனாள். பக்கத்திலிருந்தவள் அவளைப் "போதும், பேசாமலிரடி!" என்று அதட்டாவிட்டால் முழு விபரமும் சொல்லியிருப்பாள்.

உயர்ந்த வகுப்பில் படித்த சுசீலா பாவம்! பல மாசகாலம் பேய்க்கும் மருந்திட்டுக்கும் வைத்தியஞ் செய்தபின் யாரோ ஒரு புண்ணியவாளன் - வைத்தியன் அவளுக்குச் சூதகசன்னி என்று கண்டுபிடித்தான். அதற்கு வைத்தியமுஞ்செய்தான். அவள் நல்ல சேமமாகச் சீக்கிரத்தில் பாடசாலைக்குவந்து சேர்ந்துகொண்டாள். ஆகவே, இந்நிலையிலாவுலகில் மானிட பெண் ஜென்மிகளை அல்லற்படுத்தும் சூதக சம்பந்த ரோகங்களில் மகா கொடியதும், அதிக பயங்கரமும், பரிதாபமும் பொருந்திய சூதகசன்னியையும் அதன் சிகிச்சைமுறைகளையும்பற்றி ஒவ்வொருவரும் அறிந்திருக்கவேண்டியது மிகவும் அவசியமாதலால் அதைப்பற்றிச் சிறிதளவு விஸ்தரிப்பாம்.

---

கபமுங் கரைந்து, நோயாளி பேசுஞ் சக்தியைப் பெறுவான். இம்மருந்தை மூன்று நாளுக்கு மேல் உபயோகிக்கக் கூடாது. அவசியமிருப்பின் 21 நாளுக்குப்பின் மறு முறை உபயோகிக்கலாம்.

பத்தியம்:- உப்புப் புளி நீக்கவும். பால் நெய் கூட்டிக் கொள்ளவும். மறு பத்தியம் 7 நாள் காப்பாற்றவும். நல்லெண்ணெய், மீன், இறைச்சி, கரப்பான் பதார்த்தங்கள் ஒரு மாத காலத்திற்கு நீக்கவும்.

## இது வருங் காரணங்கள்

சூதகசன்னி பெண்களைத் தாக்கக்கூடிய நரம்பு சம்பந்தமான ஓர் வியாதி. சரீரத்தினின்று மாதாந்தரம் கிரமமாகக் கழியவேண்டிய அசுத்த இரத்தமாகிய சூதகமானது வெளிப்படாது சுத்த இரத்தத்துடன் சேர்ந்து விஷமாகி இரத்த நாடிகளில் தங்குவதனாலும், பெரும்பாடு, சூதகக்கட்டு, நெடுநாட்பட்ட கிராணி முதலிய வியாதிகளினாலாவது அல்லது இரத்தப்பெருக் கதிகமாகி இரத்தாசயம், மூளை இவைகளைத் தாக்கி நரம்புகளின் இயற்கைக் குணங் கெட்டுப்போவதினாலாவது இந்தநோய் உண்டாகக்கூடும்.

பெண்களின் சுகாதாரக்குறைவு, பள்ளிக்கூடங்களில் நெருக்கம் வயதிற்கும் பலத்திற்கும் மிஞ்சின மனோவிருத்தி, இளமையில் ஏற்பட்ட கெட்ட பயிற்சி, சிறுவயதில் தங்கள் பெற்றோரால் அதிக செல்வமாகவும் இளக்காரமாகவும் வளர்க்கப்பட்ட பெண்களுக்கு வளரவளரத் தங்கள் விருப்பங்கள் விரைவாக நிறைவேற்றப்படாததினால் சூதக கோளாறுகளுடன் நரம்புகளில் திடம் குறைந்து மனோவியாகூலம் அதிகரித்தல், மாதவிடாய் காலங்களில் அனுசரிக்கவேண்டிய விதிமுறைகளைக் கவனியாமலிருத்தல், உடனுக்குடன் மூழுகுதல், துப்புரவின்மை ஆகியவற்றால் பல இளம் ஸ்திரீகள் சூதகசன்னி வலிப்புக்கும் அட்டூழியங்களுக்கும் ஆளாகின்றனர்.

## இதன் குணங்கள்

1. இந்நோய் நரம்புகளைப்பற்றியே உண்டாவதால் கைகால்களில் உளைவு, கைகால்களை முடக்கிக்கொண்டு மார்பில்அறைதல், தலைமயிரையும் தேகத்திலுள்ள ஆபரணங்களையும், உடைகளையும் பிய்த்துக்கொள்ளுதல்.

2 உருண்டையாய் மேலுக்கேறி ஏதோ தொண்டையை அடைத்துக்கொண்டிருப்பதுபோல் தோற்றுதல்.

3 வலிப்பு வரும்போது கண்ணீர் வடிதல், அழுதல் அல்லது நகைத்தல். நறநறவென்று பற்களை நெருமுதல், கைகால்களை முறுக்கித் திருப்புதல், நாக்கையுங் கையையுங் கடித்துக்கொள்ளல்.

4. அடிவயிற்றின் இடதுபக்கத்தில் வேதனையும் இரைச்சலுங் காணுதல்.

5. வாதரோகம்போல் கைகால்களுக்குப் பிடிப்புக்கண்டு அசையக்கூடாமலிருத்தல்.

6. கைகால் நடுக்கம், ஒருவித வியாகூலம், காதிரைச்சல், தொண்டைக் கம்மல், கீழேவிழுதல், மூர்ச்சையாதல், திடீரென முகம் கைகால் சிவந்துபோதல் அல்லது வெளுத்துப்போதல், உடம்பு அசைவற்று விறைத்துப் பேச்சுமூச்சின்றியிருத்தல்.

7 இந்த ரோகிகள் சிலருக்குப் பசி அதிகமாயும், சிலருக்குச் தோற்றமலுமிருக்கும். வலிப்பு விட்டுவிட்டு வருதல், இசிவின்

கோளாறுகள் சமாசமடைந்தவுடன் கண்களில் நீர்வடிதல், மூத்திரம் தெளிவாயும் அதிகமாயும் இறங்குதல், சிலருக்கு வலிப்பு வரும்போது தெரியாமல் மூத்திரங் கழிதல்.

8. சரீரத்தின் சில பாகங்களில் உணர்ச்சியே இல்லாமலும்' ஒருபக்கக் கையுங்காலும் வழங்காமலிருத்தல் (ஆனால் இது பாரிச வாய்வல்ல) சிலருக்கு மொளிமூட்டெலும்புகளில் வலியும் உளைவும் இருக்கும். (ஆனால் இது வாதமல்ல)

## சில குறிப்புகள்

புருஸ்திரீகளுக்கு இந்த வியாதி விசேஷமாய்க் காணுகிறதில்லை. ஆகையால் அதிக கலவியால் இந்த ரோகம் உண்டாகிறதென்பதற்குப் போதிய ஆதாரங்களில்லை. இந்தவியாதிகண்ட சிலருக்குப் படுத்த படுக்கையைவிட்டு எழுந்திருப்பதாவது புரளுவதாவது முடியாது. ஒருவர் உதவிசெய்து எழுப்பப் பிரயத்தனப்பட்டால் ஐயோ! நோகிறதென்று அலறுவர். மலபாதைக்கு முதலாய் எழுந்துபோக எள்ளளவும் மனமிராது. சிலர் தலைவிரித்து ஆடத் துவக்குவார்கள். இத்தியாதி குணங்களோடு அவஸ்தைப்படும் ரோக ஸ்திரீயை பேய், பிசாசு, ஏவல், காற்றணைவு என்று நினைத்துக் கும்பம்வைத்து மந்திர தந்திர பூஜை முதலியவைகளைச்செய்து ஆடு கோழி உருண்டைக்கனி வெட்டி ரோகியை உபத்திரவப் படுத்துவது சில கிராமங்களில் நடைபெறுகின்றது. ஆனால் இது பூதமல்ல; பைசாசமுமல்ல; முறுக்கான நரம்புக்கோளாறேயாம். இந்த ரோகத்தை அனுபவப்பட்ட வைத்தியரன்றி மற்றவர் இலகுவில் நிதானித்தறியமாட்டார்கள். இக்கொடிய ரோகம் அநேகமாய்ப் பெண்களுக்குத்தான் உண்டாகும். ஆனால் அபூர்வமாக ஆண்களுக்கும் வரக்கூடுமென்று வைத்திய நிபுணர்கள் அபிப்பிராயங் கூறுகின்றனர்.

சில குடும்பங்களில் தாய்க்கிருந்து மகளுக்கும் அல்லது ஒரு தலைமுறை தள்ளிப் பேர்த்திக்கும் இந்தரோகம் வரக்கூடும் இவ்வியாதியில் இரத்தாசயத்தொழில், சுவாசம் முதலியவை ஒழுங்காயிருக்கும். இதில் மாணிப்பவர்கள் அபூர்வம். நகர்ப்புறங்களிலும் பார்க்கக் கிராமப் புறங்களிலேயே அதிகமாக உண்டாகிறதென்றும், சுகாதாரக்குறைவே காரணமென்றும் பல ஆங்கில வைத்தியர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். நாமும் நமது அனுபவத்தில் காணக்கூடியதாயுமிருக்கிறது. இந்த நோயாளியின் பராபரிப்பாளராகிய மூடச்சனங்கள் சிகிச்சைசெய்துகொள்வதற்குக்கூட முட்டுக்கட்டையாய் இருப்பது அனுபவசாட்சியம். ஆரம்பத்தில் வைத்தியரிடம் சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கும்போது இரவில் மந்திரவாதிகளைக்கொண்டு ரோகியைப் படுத்ாத பாடு படுத்துவார்கள். நாம் அவதானித்த சில நோயாளர் இரவில் சில மந்

திராவகிகளின் கைப்பிரம்பால் முதுகுகளில் அடிபட்டுக் காயப் பட்டதுமுண்டு.

இந்த மூடநம்பிக்கையைப் பொதுமக்கட்கு விளக்கி இந்த வியாதிக்கு நல்ல வைத்தியஞ் செய்யவேண்டிய வழிவகைகளைக் கற்றுக்கொடுப்பதே சுதேசவைத்தியர்களாகிய நாம் புரியும் சீவ காருண்யத் தொழிலின் இலட்சியமாகும்.

## இதன் சிகிச்சை

வியாதி ஆரம்பித்த உடனேயே சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும் சூதகசன்னி கண்டிருக்கும் ஸ்திரீயின் வஸ்திரங்களை யும் ஆபரணங்களையும் தளர்த்திவிடவேண்டும். காயங்கள் ஏற்படா மல் கவனிக்கவேண்டும். அளவுக்குமிஞ்சி அனுதாபங் காட்டும் உறவினரிடமிருந்து பிரித்து நல்ல காற்றோட்டமானவிடத்தில் மனக்கிளர்ச்சியும் மனக்கவலையுமற்ற சந்தர்ப்பத்தில் வைத்துப் பரிகரிக்கவேண்டும். வைத்தியர் வருமுன் வீட்டிலுள்ள தாய் தந் தையர் கொஞ்சம் சாமர்த்தியமாகவும் கண்டிப்புடனும் கனிவுட னும் ரோகியை நடத்துவது அவசியம்.

அகத்தியர் குணவாகடத்தில் கூறப்பட்டிருக்கும் சிகிச்சைமுறை:-

''சொல்லுகிறேன் சன்னிதான் கண்டவேளை
சுயமான காத்துள்ள இடத்திலப்பா
அல்லல்பட்ட மாதரைத்தான் படுக்கவைத்து
அப்பனே திரிபுகையுங் கொடுக்கச் செய்து
வல்பிணிதான் நீங்கியது பிரக்கினையே வந்தால்
வலுவான பெருங்காயக் குளம்பு யீவாய்
தொல்லைகள் தான் தீர்ந்தபின்பு பேதிக் கீய்ந்து
திரேகத்தைப் பெலமாக்க மருந்து செய்யே''

1. நாசியில் உக்கிர ஆக்கிராணம் நசியம் பண்ணுதல், புகைத் திரி முகரவைத்தல்.

2. குளிர்ந்த சலத்தைத் தலையிலும் மார்பிலும் ஊற்றுதல், ஐஸ் பாக் (ice bag) வைத்தல்.

3. நகச்சூடு வெந்நீரில் இடுப்புகள் நனையும்படிக்கு 15 நிமி ஷம் வரையில் உட்கார்ந்திருந்து (hip bath) குளிக்கச் செய்தல்.

4. வீண் எண்ணங்கள் சோம்பேறித்தனம் இவற்றுக்கிடங்கொ டாமல் சுறுசுறுப்பான வேலைகள் செய்து நல்ல புத்தகங்கள் புதினப் பத்திரிகைகளை வாசிப்பதில் காலத்தைச் செலவழிக்கச் செய்தல்.

5. தேகம் பெருத்தவர்களாயிருந்தால் முக்கியமாய்ப் போச னத்தைக் குறைக்க வேண்டும். தேகத்தில் குருதியற்று உடம்பு வெளுத்திருந்தால் அய செந்தூரம் கொடுக்கலாம்.

கைகண்ட கைமுறைகள்:

# கக்குவானுக்கு அதிசயக் குளிகை எனும் புனுகுக் குளிகை.

— வைத்திய ந. இராசலிங்கர், கொழும்பு. —

கக்குவானென்னும் குக்கல்-ரோகமானது இருமலைப் போன்றதாயினும் பாலர்களை வாட்டி வதைக்கும் ஓர் கொடிய ரோகம். இது கிருமி சம்பந்தப்பட்டுத் தோற்றும் தன்மை உடையதாயினும் ஏழு வயதிற்கு மேற்பட்டவர்களுக்குத் தோற்றுவதில்லை. கக்குவானுக்குத் தக்க சிகிச்சை செய்து குணப்படுத்தாததினால் பெரும்பாலும் இரண்டுவயதிற்குட்பட்ட அநேக குழந்தைகள் மரணத்துக்குள்ளாகின்றனர். எனினும் ஐந்து வயதிற்கு மேற்பட்ட குழந்தைகள் மரணத்துக்குள்ளாவதில்லை.

இது பாலின் தோஷத்தினாலும் ஜலதோஷத்தினாலும் வாய்வு அதிகரித்து மார்பில் இருக்கின்ற சிலேஷ்மத்தை ஒவ்வொருவேளை இளக்குந்தருணத்தில் உண்டாகும். அப்போது மிகு சத்தத்துடன் இருமல், அதில் இரத்தம் வீழல், திணறலான மூச்சு, விழிபிதுங்குவது போலிருக்தல், கண்ணீர் வடிதல், காதில் அரிப்பு ஏற்படல், ஆயாசம், வியர்வை, நித்திரையின்மை, குடித்த பாலும் புசித்த அன்னமும் கக்குதல் மல மூத்திரம் நழுவுதல், என்னும் இக்குணங்கள் உண்டாகும். இது 90 நாள் வரைக்கும் ஓர் தேவதை ஆவேசித்து நின்று ஆட்டுவதுபோல் குழந்தைகளை ஆட்டுவிக்கும்.

புனுகு புனுகுசட்டம், கோரோசனை, கெருடபச்சை, சந்தனம், வெட்டிவேர், செஞ்சந்தனம், லாமிச்சு, மாசக்காய், நற்சீரகம், கருஞ்சீரகம், சாத்திரபேதி, அதிமதுரம் இப்பதின்மூன்று சரக்கும் வகைக்குச் சமனெடை நற்சீரகக் கஷாயத்தில் கைபாக செய்பாகம் தவறாது அரைத்து மிளகுப் பிரமாணம் குளிகை செய்து கற்பூரவள்ளிச்சாற்றில் அனுபானித்து நோய்க்குத் தக்கவாறு நாளொன்றிற்கு இரண்டு அல்லது மூன்று வேளை கொடுத்து வர மூன்று நாளில் மேற்குறிப்பிட்ட ரோகங்கள் அதிசயிக்கும்படி குணமாக்கும். இலேசான இருமல் இருப்பின் பிறகும் ஒரு வாரம் உபயோகித்து வரின் நின்றுவிடும்.

---

6. மருந்து உட்கொள்ளக் கூடிய அறிவு வந்தவுடன் பெருங்காயக் குழம்பு, சுக்குச் சூரணம், உள்ளி லேகியம், சடாமாஞ்சில் பாவனத்திரவம் இவற்றில் ஏற்றதைக் கொடுக்கலாம். மலச்சிக்கலை நீக்கித் தேக தாரூட்டியத்தையுண்டுபண்ணக் கூடிய மருந்துகளைக் கொடுக்க வேண்டியது.

7. நல்ல போஷணை சக்தியுள்ள பால், மோர், பழங்கள், சூப் முதலியவை கொடுத்துச் சரீரத்தைப் பெலப்படுத்த வேண்டும் ❋

# பி. சி. ஜி. மருந்தின் மர்மம்

நேற்றுமாலை 5 மணிக்கு, கொழும்பு க்ஷயநோய்த் தடுப்புச் சங்கத்தின் கிளைஸ்தாபன ஆதரவில் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் ஒரு கூட்டம் கூடியது. விஷம்போல் தினம் க்ஷயரோகம் அதிகரித்துக்கொண்டு வருவதால், அதினின்றும் மக்களைக் காப்பாற்றும் நோக்கமாக இக் கூட்டம் நடைபெற்றது. அ. இ. சித்த ஆயுள்வேத வைத்தியசங்கம் மக்களிடையே இக் கொடிய தொற்றுநோய் எப்படிப் பரவுகிறதென்றும், இதனைத் தடுக்கும் மார்க்கங்களையும் துண்டுப்பிரசுர மூலமாயும், வானொலிப் பேச்சு மூலமாயும், பத்திரிகை வாயிலாகவும் விளக்கி வந்திருக்கிறது கூட்டம் கூடுவதற்கு முன்பதாகவே டாக்டர் சி. கந்தையாவிடமும் நேரில் கண்டு, இச்சங்கமும் ஒத்துழைக்க விரும்புகிறதென்றும், க்ஷயரோகத் தடுப்பு வழிவகைகளைப் பற்றி நாங்களும் பேசலாமா என்றும் கேட்டோம். தலைவர், நீங்கள் பேச முடியாதென்று கூறிவிட்டார். அப்படியானல் சந்தேகங்களை வினவலாமா என்று கேட்டோம். வினவலாம் என்று சொன்னர். தடுப்புவழிகளில் ஒத்துழைக்கும் நோக்கமாக எங்கள் சங்கத்தின் முக்கிய அங்கத்தவர்களாகிய

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

கக்குவானில் "நியூமோனியா" எனும் கபவாதசுரம், காய்ச்சல், சந்நி, கழிச்சல் இவைகளேற்பட்டே மரணத்துக்குள்ளாவது. இவற்றைத் தடைபண்ணுவதற்காகவே, ஆஸ்பத்திரிகளில் ஊசி போடுவதுண்டு ஏற்வகனவே இக்குளிகையை உபயோகித்தால் அக்குணங்கள் ஏற்படாமற் பாதுகாக்கும். கக்குவானென்னும் கொடிய ரோகத்தின் அவஸ்தையையும், மரணத்தையும் தடுப்பதற்கு இது ஓர் சஞ்சீவி என்பதை அனுபவவாயிலாகக் காணலாம்

மேல்நாட்டு மருந்துகளாகிய ஹூப்பிங் கியூர் (whooping cure), பேட்டுசின் (pertussin), பேட்டுசல் (pertusal றம்பகோல் ramb gol ஆகியவைகளும், மற்றும் கோரோசனைக் குளிகை, கண்டங்கத்தரி ரசாயனம் ஆடாதோடைப்பாணி, கற்பூரவள்ளிப்பாணி, ஜம்பீராவலேக, கப்பர்ஹரகுவாத் முதலியவைகளும் நாளடைவில் குணங் கொடுப்பனவாயினும் இப் புனுகுக் குளிகை ஒன்றே நாளில் குழந்தைகள் பரிதபிக்கும் அவஸ்தையை நீக்கி ஆனந்திக்கும்படி செய்வதனல் அதிசயக் குளிகை என்ற பெயரிடலாயிற்று.

இது குழந்தைகளின் சீவகாருண்ணியத்தின் பொருட்டு எல்லோருமறிந்து குழந்தைகளை உடனுக்குடன் காப்பாற்றும்வண்ணம் இவ்வைத்தியன் முகப்பில் எழுந்தருளியிருக்கும் அகஸ்திய மகாமுனிபுங்கவரால் உண்டாகி மறைபொருளாயிருந்ததை அவர் சந்நிதியில் ஒப்புக்கொடுக்கின்றேம்.

*

வைத்தியர்கள் பலர் கூட்டத்திற்குச் சென்றிருந்தோம். நகரசபை தலைவர் திரு. க. பொன்னம்பலம் தலைமை வகித்தார். கொழும்பிலிருந்து முக்கிய பேச்சாளராய் வந்திருந்த டாக்டர் ஜே. எச். எம். ஜெயசூரியா, சங். பிதா லோங் முதலியோர் பேசினார்கள். இருவரும் பி. சி. ஜி. ஊசிமருந்தை யாவரும் குத்திக்கொண்டால் இந்த நோயை இல்லாமல் செய்துவிடலாமென்று கூறினர்.

அடுத்தபடியாக இக்கிளை ஸ்தாபனத்தின் தனாதிகாரியாகிய ஈ. பி. இராசையா பேசும்பொழுது. ஆயுள்வேத வைத்தியர்களை இழிவுபடுத்திப் பேசினார். இதை ஆட்சேபிக்கும் நோக்கத்துடன் அவைத்தலைவரை நாங்கள் பேச இடந்தரும்படி கேட்டோம் தலைவர் இடந்தராமல் பின் தமது குறிப்புரையில் சித்த ஆயுள்வேத வைத்தியமே அனாதியானதென்றும், அதன்மூலம் எத்தனையோ கொடிய வியாதிகள் தீர்க்கப்பட்டிருப்பது தமக்குத் தெரியுமென்றும், ஆங்கில வைத்தியம் இலங்கைக்குள் பிந்திவந்ததென்றும், ஈற்றில் பேசிய ஈ. பி. இராசையா அப்படிப் பேசியது பிழையென்றும் எடுத்துக்கூறி, தலைவரின் கடமையை நடுநீதியுடன திறம்பட நடாத்தினார்.

இந்த புதிய பி. சி. ஜி. என்னும் மருந்தைப்பற்றிச் சில சந்தேகங்கள் இருக்கிறதென்றும், அவற்றை க்ஷயரோகத்தடை மேதாவியும், கொழும்பு ஸ்தாபனத்தின தலைவராயும் வந்துபேசிய டாக்டர் ஜெயசூரியாவிடம் கேட்கலாமா என்று அ. இ. சித்தஆயுள் வேத வைத்திய சங்கத் தலைவர் வைத்தியர் கே. எஸ். பரிபூரணாநந்தர் கேட்டதற்கு பேசமுடியாதென்று பதிலளித்து விட்டனர். சபையில் வந்திருந்த பல பெரியோர்கள் கேட்கவிடுதல் நியாயமானதே என்று அபிப்பிராயப்பட்டனர். யாழ்ப்பாணம் நகரசபை சுகாதார அதிகாரி டாக்டர் இராஜசிங்கம், தாம் நேரில் ஜெயசூரியாவிடம் சொல்லி மறுமொழி தரும்படி செய்வதாகவும், கேள்விகளைக் குறித்துத் தரும்படியும் கேட்டார். உடனே கேள்விகள் எழுதிக் கொடுக்கப்பட்டது. ஆனல் மறுமொழி ஒன்றும் கூறாது கூட்டம் முடிந்தது.

டாக்டர் ஜெயசூரியாவின் பேச்சையாவது தமிழில் மொழி பெயர்த்துச் சொல்லவேண்டுமென்று கேட்டதற்கும், அப்படிச் செய்யப்படவில்லை. எத்தனையோ வியாபாரிமார், பொதுஜனங்கள் ஒன்றும் விளங்காமல் வீடு திரும்பினர். பி. சி. ஜி. ஊசிமருந்து எப்படிப்பட்டதென்று மக்கள் அறிந்துகொள்ளச் சந்தர்ப்பம் அளியாது விரைவில் யாவருக்கும் இந்த ஊசி குத்தப்படவிருப்பதை நாம் இப்பொழுது எச்சரிக்கவேண்டியிருக்கிறது.

ஏ. எஸ். இராசையா,
அ. இ. சித்த ஆயுள்வேத வைத்திய சங்கக் காரியதரிசி.

யாழ்ப்பாணம்,
19-11-50.

பதார்த்த பண்பு:

# முடக்குநோய் தீர முடக்கற்றான்

[வேறுபெயர்: முடக்கொற்றான், முடக்கறுத்தான்;
சிங்களம் - வல்பெநேற; சமஸ்கிருதம் - கர்ணஸ்போட]

— "சோமா" —

நம் நாட்டில் கிராம வாசிகளைவிட நகரவாசிகளே பெரும்பாலும் பிடிப்பு ரோகமெனும் முடக்குவாயுவால் மிகுதியும் துன்புறுவதைக் காண்கிறோம். இந்த முடக்கு அல்லது பிடிப்பு என்பது பொதுவாக வாதரோகத்தில் அடங்கியது. வாதரோகமென்றால், தேகத்தைச் சிருஷ்டித்துக் காத்து, சங்கரித்துநிற்கும் வாத பித்த கபம் எனும் தாதுக்களில் ஒன்றாகிய வாதம், உண்ணுகிற ரசாதி வஸ்துபேதங்களினாலும், தகாத நடத்தைகளினாலும் ரோக முகமாகத் திரும்பிப் பலவித வாதரோகமாகின்றது. வாதரோகங்கள் பலவகைப்படுமெனினும், அவற்றின் லக்ஷணங்களும் பிறவும் வெவ்வேறு விதங்களாக மருத்துவ நூல்களில் கூறப்பெறினும், பொதுவாகக் கவனிக்கில் ஒவ்வொரு கீலின் கணுக்களின் பிடிப்புகளிலும், நரம்புத் துவாரங்களிலும் கெட்டுப்போன "தோஷம்" தங்குங்காலத்து அந்தந்த வயதிற்கும் காலத்திற்கும் ஏற்றவாறும், தேகத்தின் எந்தப்பாகத்தில் தங்கி நிற்கின்றதோ அதற்குத் தக்கவாறும் பெயர்களைப் பெற்றுநிற்கும். ஆகவே எந்த இடத்தில் எந்தக்காலத்தில் எந்தப் பெயரோடு தோன்றினாலும் இதற்கு ஆதாரமாயுள்ள 'தோஷம்' ஒன்றே. இதற்கு இடம், காலம், வயது இவற்றிற்கேற்ப சிகிச்சை செய்துகொள்ளல் வேண்டும்.

இவ்வாறு தேகம் ரோகத்தின் வாய்ப்பட்டபின் அதற்கேற்ற வகையில் நிவாரணந் தேடிக்கொள்வதைவிட 'நோய்க்கிடங் கொடேல்" என்ற தமிழ்ப்பிராட்டியாரின் அமுதமொழிப்படி நோய்க்கிடங்கொடாமல் வருமுன் காத்தலே சிறப்புடையதாம்.

வருமுன் காத்துக்கொள்வதாவது நம் முன்னோர்கள் மொழிந்துள்ள ஆசார நியமத்தின்வண்ணம் நடந்துகொள்ளலே. பகல் போஜனத்தில் பிரதிதினமும் தவறாது ஏதேனும் ஓர் இலைக்கறியென்னும் கீரையைச் சேர்த்து உண்ணல் வேண்டுமென்பது நமது உணவு முறையை ஆராய்ச்சி செய்து ஒழுங்குசெய்த சித்தர்கள் எனப்படும் பேராசிரியர்களின் கட்டளை.

"இலைக்கறி யின்றேல் மலச்சிக் கொழியா" என்பதும் பண்பட்ட பழமொழி. எனவே இவ்வகை இலைக்கறியாகிய கீரைவகையில் வாத ரோகங்களை ஒழிக்கக்கூடிய மகா சக்திவாய்ந்த முடக்கற்றான் சமலிகையும் ஒன்றாகும்.

1. "சூலைப்பிடிப்பு சொறி சிரங்கு வன்கரப்பன்
காலைத் தொடுவாய்வுங் கண்மலமுஞ் — சாலக்
கடக்கத்தான் ஓடிவிடுங் காசினியை விட்டு
முடக்கத்தான் றன்னை மொழி"

2. "முடக்கொற்றான் ...................... உடற்குள்
உட்டணம், தோலின் மேற் சீதளம்"

முடக்கற்றான் மூலிகையால் கீல் பிடிப்பு, சொறி, சிரங்கு, பலம்பொருந்திய கரப்பான்கள், கால்வாதம், மலக்கட்டு இவை போகும் என்பதும், இது உட்பிரயோகத்தில் உஷ்ணமாகவும், வெளிப்பிரயோகத்தில் சீதளமாகவும் தொழில்புரியும் என்பதும் ஷெசெய்யுட்களின் பொருள்.

முடக்கு + அறுத்தான் = பிடிப்பு, வாயுக்களை ஒழிப்பான்.

இம் மூலிகையை இளந்துளிர்களாக எடுத்து பூச்சிகள், புழுக்கூடுகள், முட்டைகள் முதலியன இல்லாது சுத்தப்படுத்திக்கொண்டு பின்கண்டவாறு அவரவர் இஷ்டப்படி பாகம்செய்து உண்ணலாம்.

1. ஷெ முடக்கற்றான் கொழுந்தை துவரை, பயறு, கடலை, இவற்றின் பருப்புகளில் ஏதேனும் ஒன்றுடன் சேர்த்துக் கூட்டுக் கறியாகச் சமைத்துச் சாப்பிடலாம்.

2. உளுத்தம் பருப்பு, துவரம்பருப்பு ஏதேனும் ஒன்றுடன் சேர்த்து அவித்து, உப்பு மசாலை முதலியன சேர்த்துத் தளர்ச்சியாகக் கடைந்து சாப்பிடலாம்,

3. பருப்புடன்சேர்த்து, சாம்பாரோ ரசமோசெய்து சாப்பிடலாம்.

4. இக் கொழுந்துடன் கடலைப்பருப்பு, பச்சைமிளகாய், கொத்தமல்லித் துளிர், இஞ்சி, தேங்காய்ப்பூ, வெங்காயம், உப்பு, தேசிப்புளி, முந்திரிப் பருப்பு, மஞ்சள்பொடி முதலியவற்றைத் திட்டமாய்ச் சேர்த்து எண்ணெய், தேங்காய்நெய், இலுப்பைநெய் இவற்றில் ஏதேனுமொன்றில் வடையாகவோ, பகோடாவாகவோ பாகஞ் செய்துகொள்ளலாம். எக்காரணத்தை முன்னிட்டும் இதை நெய்யில் பாகஞ் செய்யக்கூடாது.

5. முடக்கற்றான் கொழுந்தை ஆமணக்கு நெய்விட்டு வதக்கி அத்துடன் உப்பு, தேசிப்புளி, தேங்காய்ப்பூ, மிளகாய் முதலிய மசாலைகளும் சேர்த்துத் துவையலாக அரைத்துக்கொள்ளலாம்

6. முடக்கற்றான் துளிராக அகப்படாத காலத்து முற்றிய இலையை நீர்விட்டு வேகவைத்து வடித்து மிளகுரசம் அல்லது பருப்பு ரசத்தில் சேர்த்துச் சாப்பிடலாம்.

7. கொழுந்தைக் குறுகிய பொடியாக நறுக்கித் தேங்காய்நெய் அல்லது எண்ணெய் அல்லது இலுப்பைநெய்யில் வதக்கிப் புளி சேர்த்து "புளிப்பச்சடி"யாகவோ, அல்லது இனிப்புச் சேர்த்து

# திரிதோஷ விளக்கம்

— வைத்தியர் **M. P P. M.** இஸ்மாயில் —

பஞ்சபூதிய மனிதவுடலானது, திரிதோஷங்கள், சப்த தாதுக்கள், மும் மலங்கள் ஆகியவற்றால் நிலைத்துளது. திரிதோஷங்கள் எனப்படுவது:- வாதம், பித்தம், சேத்மம் என்பவைகளாகும்; ஆகையால் இவை ஒவ்வொன்றையும் பற்றிச் சிறிது ஈண்டு ஆராய்வாம்.

1. வாதம்:- வாதம் என்பதே வாயு வாயு என்பது உயிரைக் குறிப்பதாகும் உதாரணமாக ஒரு மோட்டார் வண்டியின் இயந்திரத்தை எடுத்துக் கொண்டால் அதில் மூன்று முக்கிய அமைப்புகள் தென்படுவதை நோக்கலாம். பொறி (spark) ஏற்படும் அமைப்பு, மனித உடலின் நரம்பமைப்பை ஒத்ததாகும். அப்பொறியை உண்டாக்கும் சக்தியானது வாதத்துக்கு ஒப்பாகும். அச் சக்தி மின்சாரத்தைப் போன்ற ஒரு காணமுடியாத சக்தியாகும். ஆயினும் மின்சாரமுமல்ல; அதுதான் உயிர். உயிர் என்பது பிராணன் ஆகும். இதுவே வாதம் அல்லது வாயு எனப்படுவது. ஓர் அணுப் பொருளில் அது அணுசக்தியாக விளங்குகின்றது. அதுவே உயிர்ச் சக்தி. அதாவது கிரியாசக்தியாகும் ஓர் இரும்புத் துண்டுக்குக் காந்தம் ஊட்டினால் அதில் ஓர்வித சக்தி ஏற்படுகிறது அத் துண்டைத் தீயில் காய்ச்சினால் அச் சக்தி ஒழிந்து போய் விடுகிறது. அச் சக்தியைப் போன்றதே இதுவும்.

சிக்கலான உடற் கூற்றிலே இது நரம்புக் கூட்டத்தை இயக்கும் சக்தியாகவுள்ளது. பித்த சேத்மங்கட்குச் சக்தியைக் கொடுப்

---

இனிப்புப் பச்சடியாகவோ செய்துகொள்ளலாம். (புளிப்பச்சடியாயின் சிறிது பெருங்காயம் சேர்த்துக்கொள்ளல் வேண்டும்)

மேற்காட்டியவற்றுள் எவ்வித பாகமாகவேனும் கிழமையில் 3 முறையாகப் பகலில் மாத்திரம் சேர்த்துவரில், நாரிப்பிடிப்பு, கால்கை பிடிப்பு முதலிய வாதரோகங்கள் அணுகமாட்டா.

இதன் இலை, வேர், சமூலங்களைக் கஷாயமிட்டு வாதம், மூலம், நாட்பட்ட இருமல் இவைகள் தீருவதற்குக் கொடுக்கலாம்.

## சில வெளிப் பிரயோகங்கள்:

1. இலையை எண்ணெயிலிட்டுக் காய்ச்சி (பாதத்தில் வரும்) வாத வலிகளுக்குப் பூசலாம்.

2. இலைச்சாற்றைச்சூடாக்கி இளஞ்சூட்டுடன் காதில்விட வாயுவால் உண்டான காதுவலி, காதால் சீழ்வடிதல் குணமாகும்.

3. இலைகளை வதக்கி அடிவயிற்றில் வைத்துக்கட்ட சூதகத்தையும், கருப்பாசய அழுக்குகளையும் வெளிப்படுத்தும். ❋

பதும் வாயுவே இதுவே அவைகட்குத் தலைமைத்து. தேகத்தி லுள்ள நரம்புகட்கு ஐந்து நடுநிலைகள் இருப்பது போன்று வாயு வும் ஐந்து வகையாகும். அவை ஒவ்வொன்றும் தனித்தனி ஒவ் வொரு வேலையைப் புரிகின்றன. முதலாவது, மார்பில் பிராண வாயுவாகவும்; இரண்டாவது, இடையில் அபான வாயுவாகவும், மூன்ருவது வயிற்றில் சமான வாயுவாகவும், நான்காவது தொண் டையில் உதான வாயுவாகவும், ஐந்தாவது உடல் முழுதும் வியான வாயுவாகவும் இயங்குகின்றது. மின்சார இயக்கத்தில் தலைமைச் சாலையில் இருந்து வேண்டிய மின்சாரத்தை ஊட்டிக் கொள்ளு கின்ற பலகிளைச்சாலைகளைப் போன்றனவையே இவையும். உற்சாக மூட்டுதல், மூச்சு இழுத்தல் விடுதல், ஒழுங்குபடுத்தல், மனோவாக் குக் காயங்களைச் சரிவர நடத்தல், அணுக்களின் வேலையைச் சரி வர விருத்தி செய்தல், பலவித தாதுக்களை உண்டாக்கல், காப்பாற் றல், கழிவுப் பொருட்களை உடலினின்று ஒழுங்குற வெளிப்படுத் தல், முதலியன வாயுவின் இயற்கையான தொழில்களாகும். உதா ரணமாக மதலை பிறத்தற்கும் காரணமாக இருப்பதுவும் வாத மேயாகும்.

2. பித்தம்:- இது அந்த மோட்டார் இயந்திரத்தில் எரிக்கும் சக்திக்கொப்பாகும். மாந்தரின் உடலில் பல்வேறு பொருட்கள் இரசாயன மாறுதல்களை அடைவதால் உண்டாகின்ற உடல் தீயாக விளங்குவது இதுவே. இது உடலில் ஐந்து இடங்களில் ஐவகைத் தொழில்களைப் புரிகின்றது. முதலாவது வயிற்றில் ஜீரண சக்தி யையும், இரண்டாவது கல்லீரல், மண்ணீரல்களினின்று இரத்தத் திற்கு நிறத்தையும், மூன்ருவது இருதயத்தில் தங்கி அறிவையும், ஞாபக சக்தியையும், நான்காவது கண்ணின் கருவிழி மூலம் பார் வைத்திறனையும், ஐந்தாவது தோலிற்கு ஒளியையும் தருகின்றது. இப் பித்தம் உஷ்ணம், தீ, சூரியன் முதலியவற்றுக் கொப்பாகும். உடலில் பித்தம் இயற்கையான அளவுக்குக் குறையுமானல் ஜீரண சக்தி கெடும். இரத்தத்தின் நிறம் மாறுதலடையும். மனோசக்தி கள் சீர்கெடும். பார்வை மந்தப்படும், அழகு குன்றும். பித்தம் அதி கமானல் உடல்நிறம் வெளுக்கும், குறைந்தால் பசுமை, மஞ்சணி றமாக மாறும்.

3. சேத்மம்: இது அம் மோட்டாரிலுள்ள இயந்திரத்தைக் குளிரச் செய்யும் தண்ணீர்த் தொட்டிக்கும், வழுவழுப்பையுண் டாக்கும் முறைக்கும் ஒப்பாகும் இவ் வழப்புத் தன்மைத்த எண் ணெய் இல்லையேல், இயந்திரம் மிகு சூடேறி எரிந்துவிடும். இது போன்றே உடலில் என்புப் பூட்டுக்கள் வரட்சியும், விறைப்பும், சிக்கலும் அடைவதுண்டு. இவற்றை நீக்குவது கபம் எனும் சேத் மமேயாம் இதற்கும் ஐவகைத் தொழில்களுள. முதலாவது வயிற் றிலுணவை ஈரமாக்கி நசுக்கவும், இரண்டாவது மார்பில் இருதயம்

அதிக சூடேருமலும் தேய்வடையாமலும் தடுப்பதற்கும், மூன்ருவது, நாவில் ருசியையும் ஈரத்தையும் கொடுத்துக் காக்கவும், நாலாவது, தலையில் மூளையோடு சம்பந்தப்பட்ட உணர்வுப் பொறிகளை உராய்தலில் நின்று வழுவழுப்பாக வைத்திருக்கும், ஐந்தாவது, பூட்டுகளைக் கெட்டியாக வைத்திருப்பதற்கும், பல அசைவுகளை உழற்றவும், காப்பாற்றவும் வேலை செய்கிறது. சேத்மமானது அசைவுக்கும் நீரிலுள்ள குளிர்ச்சிக்கும் ஒப்பாகும். இந்து, சேத்மத்துக்கு உவமையாக இருக்கிறது.

## வாத பித்த சேத்மங்களின் மருத்துவக் குறிகள்

1. வாயு வரட்சியாகவும், புகை போன்று எத்திசைகளிலும் பரவக்கூடியதும், பசைபற்றதும், லேசாயும், சீதளத்தன்மையுடையதாயும், ஊடுருவிச் செல்வதாயும், முறைப்பாயும், சுறுசுறுப்பாயும் இருப்பதோடு துவர்ப்பையும், சொற்ப சிவந்த செவ்வான நிறத்தையுமுடையது.

2. பித்தம் சிறிது பிசுபிசுப்பாயும், திரவத்தைப் போன்று இயங்குவதாயும், சிறிது எண்ணெய்ப் பசையுடனுஷ்ணம் செய்வதாயும், ஒட்டாமலும், சுறுசுறுப்பாயும், கசப்பாயும், பச்சை இறைச்சி போன்ற நாற்றமுடையதாயும், பசுமை அல்லது மஞ்சணிறமாகவும் இருக்கும்.

3. சேத்மம் குழகுழப்பாயும், கடினப் பொருள் போன்று அசைவற்றதாயும், வழுவழுப்பாயும் பாரமாயும், சீதளம் செய்வதாயும் தொடுவதற்குக் குளிர்ச்சியாயும், மந்தமாயும், மிருதுவாயும், இனிப்பாயும், வெண்மையாயும் இருக்கும்.

சில சமயங்களில் இத்தோஷங்கள் அளவுகுலைந்து தொந்தப்பட்டால் அப்போது தொந்தப்பட்ட குறிகள் தோன்றும். அப்போது வாதபித்தம் வாதசேத்மம், பித்தசேத்மம் ஏற்பட்டிருக்கிறதென்ருே அல்லது ஒரே தருணத்தில் மூன்று தோஷங்களும் பாதித்திருக்கிறதென்ருே கூறலாம். தருணத்துக்கேற்றவாறு அவ்வவற்றின் நிலை குலைவையறிந்து ஏற்ற சிகிச்சை செய்ய வேண்டியது மருத்துவராய நம் கடமை.

(i) நிலைகுலைந்த வாதத்திஞல்:- குதிக்கால் வெடிப்பு, நகச் சிதைவு, தோல் வரட்சி, மயிர்க்கால்களில் குழி விழுதல், சிதைவு, அங்கம் மரத்துப்போதல், வலி, திமிர் கடுப்பு, உளேச்சல், விறைப்பு, தசைப்பிடிப்பு, தசை இறுகல், வயிற்றுப் பொருமல், மலபந்தம், மலம் சிறுத்தல், நாச்சொறி, தாது அழிவு, செவிடு, காதிரைவு போல் உணர்வுப் பொறிகளின் வேலைகள் சீர்கெடல், மூர்ச்சை, தூக்கமின்மை, சபல சித்தம், நடுக்கம், கொட்டாவி, பிதற்றல், மூளைநரம்புகளின் நிலைகுலைவால் ஏற்படும் கோளாறுகள் முதலியன சம்பவிக்கின்றன. வாயில் ஓர் வித துவர்ப்புச் சுவையும், அவ்

கத்தில் செவ்வானம் போன்ற தாம்பிர நிறமும் இருக்கக் கூடும். இவ்வாத நோய் எண்பது எனக் கூறப்பட்டுளது. ஆனால் மேலும் இருக்கலாம்.

(ii) தணல் வீசுவது போன்ற வெப்பம், தோல் எரிச்சல், உடல் புகைச்சல், புளிச்சுவை, தாகம், உடலுள் எரிச்சல் மிதமான வியர்வை, துர் நாற்றம், இரத்தம் நீர்த்தல் அல்லது தசைமெலிதல், செந்தழிம்புகள், கொப்புளங்கள், மஞ்சணிறம், காமாலை, வாய் கசப்பு வாயில் குருதி நாற்றம், சுவாச நாற்றம், வாய், நெஞ்சு, கண் ஆசனங்களில் எரிவு, மயக்கம், பார்வை திடமின்மை மந்தப்ப டல், சிறுநீர், கண்கள், மலம், நகம் யாவும் மஞ்சணிறமாதல் முத லியன நிலைகுலைந்த பித்தத்தில் முக்கிய குறிகளாம். அது நாற்பது என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது. ஆனால் மேலும் இருக்கக் கூடுமெனச் சில வைத்திய சாஸ்திரங்கள் இயம்புகின்றன.

(iii) பசிமந்தம், அயர்வு, மிதமிஞ்சிய தூக்கம், சருமம் மரத் துப் போதல், உடல் பளுவாதல், சோம்பல், வாய்நீர் சுரப்பு மிகுதி, சளி தள்ளுதல், மலப்பொருட்களை நிகரித்தல், குரல் விகாரம், பல வீனம், மார்பில் பற்றுப் போட்டாற் போன்ற உணர்ச்சி, இரத்தக் குழாய்கள் நிரம்பியது போலிருத்தல், கழுத்தில் நெறி கட்டுதல், உடல் பாரிப்பு, பசி குறைவு, நமைச்சல், தோல் வெளுப்பு, சிறு நீர், மலம், நகம், கண் வெளுத்தல், முதலியவைகள் நிலைகுலைந்த கபத்தின் முக்கிய குறிகளாம். இது இருபது அல்லது இருபதுக்கு மேல் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

மனித தேகமானது திரிதோஷங்கள், சப்த தாதுக்கள், மும் மலங்கள் ஆகியவற்றால் நிலைத்துளதென்று முன்னரே இயம்பி னோம். திரிதோஷங்களை வாத பித்த கபம் என்றோம். சப்த தாதுக் கள்:- வெண்குருதி, செங்குருதி, தசை, கொழுப்பு, எலும்பு, எலும்புட்கரு, உயிரணுக்கள், என ஏழு வகைப்படும். மலம், சிறு நீர், வியர்வை, மும்மலங்களெனப்படும். முக்கியமாக நோக்குமி டத்து, தோஷங்கள் ஊட்டப் பொருட்களாகவும், தாதுக்கள், அணு அல்லது அணுக்கூட்டங்களாகவும், மலங்கள் கழிவுப் பொருட்களாகவும் விளங்குகின்றன. இம் மூன்றின் மிகுதி அல் லது குறைவால் ஏற்படுவதையே நோய் என்று கூறுகின்றோம். காற்று, பித்தநீர், சளி என்ற இம் மூன்றும் முறையே வாத பித்த சேத்மங்களின் கழிபடுபொருளாய மலங்களாகும். சிகிச்சையின் நோக்கம் அவற்றின் நிலையைச் சரிப்படுத்துவதாகும். நோயில் அள வுக்கு மீறுபட்டுள்ள நிலைகளையே சாதாரண மக்கள் வாத பித்த கபமெனக் கூறுகின்றனர். முதலில் நோயின் காரணங்களை நீக்கி, குற்றம் களைந்து, தாதுக்களை அவ்வவற்றின் சரியான நிலைக்குக் கொண்டுவருவதுதான் சிகிச்சையின் முக்கிய தத்துவமாகும். இவற் றில் யாதொன்று அளவுக்கு மீறினும், சரிசமனாய்க் கொணர்வது

# பரராசசேகரம் என்னும் வைத்திய நூலைப்பற்றி வைத்தியர் A தங்கரூபன் அவர்கள் எழுதிய சில ஆராய்ச்சிக் குறிப்புகளின் விமர்சனம்

— வைத்தியர் வி. கனகசபை —

இப்பத்திரிகையின் மலர் 1 - இதழ் 11ல் பரராசசேகரம் என்னும் வைத்திய நூலின் ஆக்கியோனைப்பற்றிச் சில ஆராய்ச்சிக் குறிப்புகள் என்ற தலையங்கப் பெயருடன் ஒரு கட்டுரை எழுதி வெளியிட்டேம். அது, அந்நூலின் ஆக்கியோனைப்பற்றி உலகில் பலவிதமான கர்ணபரம்பரை வரலாறுகளும், அபிப்பிராய பேதங்களும் நிலவுவதால், அறிஞர் தாமறிந்த உண்மையைத் தக்க ஆதாரங்களுடன் வெளியிட முயலுவதற்கு ஒரு தூண்டுகோலாக எமக்கு எட்டிய சிலஅபிப்பிராயங்களை ஏதுக்களுடன் வெளியிடப் பட்டதாகும்; ஏனெனில் "கலவரம் ஏற்பட்டால் ஞாயம் பிறக்கும்" "எரிந்தடங்குந் தீயை விறகுக்கோல் கொண்டு கிளறினல் அது சுவாலித்தெரியும்" என்ற முதுமொழிகளின்படி இது விஷயத்திற் பராமுகமாயிருக்கும் அறிஞர் உலகம் எமது குறிப்புகளால் விழித்து முயன்று தாம் கண்ட உண்மையை வெளியிட்டு உலகிற்கு உபகரிக்குமென்னும் எண்ணத்தினல் என்றறிக. அஃதன்றி, "யாம் கண்டதே உண்மை முடிபு மற்றெல்லாம் பிறழ்பு" என்ற தீர்மானத்துடன் வெளியிடப்பட்டதன்று இக் கருத்து எமது கட்டுரையின் முடிவிலுள்ள வேண்டுகோள் வாக்கியத்தால் யாவர்க்கும் தெற்றெனப் புலப்படும்.

அதனல் அந்த எமது வேண்டுகோளின்படி, அறிஞர் உலகம் எமது ஆராய்ச்சிக் குறிப்புகளை ஒட்டியாயினும், வெட்டியாயினும் தக்க அகச்சான்று புறச்சான்றுகள் கொண்டு உண்மைகளை வெளியிடுதலே முறையாகும். அங்ஙனஞ் செய்யாது கேவலம் ஒருசார் கர்ண பரம்பரை வரலாறுகளை நம்பி, போலி ஏதுகொண்டும், பொருந்தா ஊகங் கொண்டும் அக் கர்ண பரம்பரை வரலாறுகளை உறுதியாகப் பற்றிக்கொண்டு, உண்மையை ஆராய்ந்தறியும் விருப்பும் முயற்சியுமின்றி, அதுவே அமையுமாயிருக்க வேறு ஆராய்ச்சி எற்றுக்கு? என்று கூறுவோர் கூற்று "முன்னேர் தாம் தொட்டுப் பருகி ஆண்டுவந்த உவர் நீர்க் கேணியை நாம் அநாதரவு செய்து

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

தான் சிகிச்சைக் கடன். எனவே, நோய்க் காரணங்களை ஒழிப்பதாலும், வேலை, இளைப்பாறுதல், தூக்கம் முதலிய பழக்க வழக்கங்களை ஒழுங்குபடுத்துவதாலும்; உணவின் அல்லது தக்க மருந்தின் சிகிச்சையாலும், சிலதலைவால் ஏற்படும் வாத பித்த கப ரோகங்களை மாற்றலாம் என்பது வெள்ளிடைமலைபோற் றெள்ளிதில் புலனுகின்றது.

தள்ளி, வேறு நன்னீர்க்கேணி தொட்டுப் பருகல் சாலாது" என்று கூறும் பிடிவாதக் கொள்கையாளரது கூற்றுப்போன்றதன்றி வேறுயாதாகும்? இவ்வாறே, எமது கட்டுரையை விமர்சனம் செய்யப் புகுந்த நண்பர் தங்கரூபன் அவர்களது கூற்றுமிருக்கிறது. [மலர்-2, இதழ்-1 பக்கம்-9-12]

மேலும் நண்பரது விமர்சனம் எமது அபிப்பிராயத்திற்கு யாம்காட்டிய அகச்சான்றுகளை திரிபுடடக் கருத்துக் கொண்டு தமக்கு ஆதாரமாகக் காட்டியும் புறச்சான்ருக ஒருசார் கர்ண பரம்பரை வரலாற்றைக் காட்டியும் செல்லுகின்றது.

எமது அபிப்பிராயத்திற்குச் சாதனங்களாகப் பரராசசேகர நூலிலிருந்தே அகச்சான்றுகளாக யாம் எடுத்துக் காட்டியவற்றிற்கு யாம் கொண்ட கருத்தோ நண்பர் அவர்கள் கொண்ட கருத்தோ ஊகத்திற்குப் பொருந்துவதாகவுள்ளது எது? என்று ஐயுறுவார்க்கு அவ்வையத்தை அகற்றுதற் பொருட்டு முன்னும் பின்னுமுள்ள விஷயத்தொடர்பு, அவை அமைந்த பிரகரணம் [இடம்], நுதலிய பொருள், பொருத்தம் முதலியவற்றுல் யாம் கொண்ட கருத்தே வலியுறுமென்பதை விளக்கு முகத்தாலும், நண்பர் ஒருசார் கர்ணபரம்பரை வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு செய்யும் அனுமானத்தின் பலாபலத்தை ஆராயுமுகத்தாலும் நண்பரது விமர்சனம் பொருந்தாக் கூற்றுதலையும் எமது அபிப்பிராயம் பொருந்துவதாயிருக்குமாற்றையும் வாசகர்க்கு விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். வேறன்று. அவற்றுள் நண்பர் கர்ணபரம்பரை வரலாறுகொண்டு நாட்டப் புகுந்த அனுமான விஷயத்தை முதலில் ஆராய்வாம்.

பரராசசேகர நூலை ஆக்கியோன் பரராசசேகர மன்னனே பிறரல்லர் என்பதற்கு நண்பர் தங்கரூபன் அவர்கள் முதலிற்கூறிய கூற்றுக்களின் சாரமாகிய அனுமானப் பிரமாணம் பின்வருமாறு:

"குறித்த நூலின் பெயரைக்கொண்டே பரராசசேகரனென்றொரு நூலாசிரிய வைத்தியன் யாழ்ப்பாணத்திற் சீவித்திருந்தது உண்மையானுல் ஆசிரியன் அவனேயென்பது தெளிவாம். ஏன்? அகத்தியம், தொல்காப்பியம் முதலான நூல்கள் ஆக்கியோன் பெயராலேயே நாமமிடப்பட்டவை, அவைபோல" என்பதே அவ்வநுமானம். இதில், 'உண்மையானுல்" என்ற சொல் உண்மையாகும்; 'அதனுல்" என்ற பொருளைத் தருகின்றது. "ஏன்" என்னும் காரண சூசகச் சொல்லுக்கு முன்னேயுள்ள வாய்க்கியம் ஒன்றினை ஒன்றுபற்றுதல் [அந்நியோந்நியாசிரயம்] என்ற குற்றத்தோடு கூடியதாகக் காணப்படுகின்றது. ஆதலால், அதனுற் குறிக்கப்பட்ட பொருள் உண்மையன்று என்பது தெளிவாம். எங்ஙனமெனில் 'பரராசசேகரம் என்ற நூலின் பெயரைச் சாதனமாகக் கொண்டு பரராசசேகரன் என்றொரு வைத்தியநூலாசிரியன் இருந்தமை

நிச்சயிக்கப்படும்' என்பதும், 'அவனிருந்தமையைச் சாதனமாகக் கொண்டு (= பரராசசேகரன் ஒரு வைத்திய நூலாசிரியனிருந்தைச் சாதனமாகக் கொண்டு) பரராசசேகரம் என்ற வைத்திய நூல் அவனுல் ஆக்கப்பட்டதென்பது நிச்சயிக்கப்படும்.' என்பதும் [அதாவது பரராசசேகர நூலால் பரராசசேகரன் ஒரு 'நூலாசிரியன் என்பதும், அவன் ஒருநூலாசிரியனுயிருத்தலால் பரராசசேகர நூல் அவனுலாக்கப்பட்டது என்பதும்] அவனியல்பைத் தாபிப்பதற்கு நூல்சாதனம், நூலினியல்பைத் தாபித்தற்கு அவன் சாதனம்' என்றறியப்படுதலால், அது 'ஒன்றனையொன்று பற்றுதல்" என்ற குற்றமாதல் தெளிபலாம்.

மற்றும் ஆண்டுக்காணப்படும் அனுமானங்களும் போலியாம். எப்படியெனில் விளக்குவாம். நண்பரது அத்தொடர்களாற் பெறப்படும் கருத்தாகிய அனுமானப் பிரமாணம் பின் வருமாறு:-

"பரராசசேகரம் பரராசசேகரன் என்னும் ஒருவனுற் செய்யப்பட்டது [பிரதிஞ்ஞை]; அவனது பெயரால் அது பெயர் பெற்று வழங்கலின் [ஏது]; யாது ஒருவன் பெயராற் பெயர் பெற்று வழங்குமோ அது அவனுற் செய்யப்பட்டதே, அகத்தியம் தொல்காப்பியம் முதலிய நூல்கள்போல (அதாவது எங்ஙனம்

(தொடர்ச்சி 71-ம் பக்கம் பார்க்க)


# செ. சிவக்கொழுந்து & சன்

மருந்துச்சரக்கு வியாபாரம்

**52, பெரியகடை, : : யாழ்ப்பாணம்.**

**ஸ்தாபிதம் :- 1923**

மருந்துச் சரக்கு வியாபாரத்தில் நீண்டகால அனுபவம்.

எங்களிடம் உயர்ந்த ரகமானதும் புதிதானதுமான எல்லாவித மருந்துச் சரக்குகளும், கோரோசனை கஸ்தூரி, குங்குமப்பூ, புனுகு, பச்சைக்கற்பூரம், முதலியவைகளும், அபிஷேகதிரவியங்களும்

**சகாயமான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.**

சரியான சந்தர்ப்பத்தில்
ஞாபகப்படுத்துகிறோம்

★

# பாடசாலைப் புத்தகங்கள் மற்றைய உபகரணங்கள்

யாவும்

எந்த வகையில் எவ்வளவு வேண்டுமோ
எம்மிடம் விசாரியுங்கள்!

## எஸ். எஸ். சண்முகநாதன்

அன் சன்ஸ்

257, காங்கேசன்துறை ரோட்,

யாழ்ப்பாணம்.

போன்: 16] ஸ்தாபிதம்: 1906. [தந்தி: "நாதன்"

# மருந்துச் சரக்குகள்

சகலவிதமான
உயர்ந்த மருந்துச் சரக்குகளும்
எங்களிடம்
நிதானமான விலைக்குக் கிடைக்கும்.

ஸ்பெயின் தேசத்துக் "குங்குமப்பூ"
எங்களுக்கு நேரில் வருகிறது.
வந்து வாங்கிப் பாருங்கள்!

கோரோசனை, பச்சைக்கற்பூரம், கஸ்தூரி,
மற்றும் பாஷாணச் சரக்குகள்,
சுத்தமான நெல்லிக்காய்க் கெந்தகம், ரசம்
யாவும் நேரில் தருவித்து நயத்தில் தருகின்றோம்.

ஒருதடவை பரீட்சித்துப் பாருங்கள்!

**கே. இரத்தினசபாபதி அன் சன்ஸ்,**
131, கே. கே. எஸ். றோட்,
பெரியகடை :: யாழ்ப்பாணம்.




# சிரநேத்திராஞ்சனத் தைலம்

தினந்தோறும் இதில் 20 சொட்டுத் தலையிற் தேய்த்து, வாரம் இருமுறை வெந்நீரில் ஸ்நானஞ் செய்தால் கண், மூக்கு சம்பந்தமான சகல வியாதிகளும், பித்தமயக்கம், தலைவலி, கபால இடி முதலியனவும், இருமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி ஆகிய ரோகங்களும் தீர்ந்து முகவசீகரமும் ஞாபகசக்தியும் உண்டாகும்.

**2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25.**

**4 அவுன்ஸ் சீசா ரூ. 5-50.**

**மு. க. ஜெகநாதன்,** கண் வைத்தியர்

பெரியகடை : : யாழ்ப்பாணம்.

---

# லெக்ஷ்மி விலாஸ்
# வைாள் காப்பி ஹோட்டல்

★ நவீன மிட்டாய்கள்
உயர்ந்த பலகாரங்கள் ★

சுத்தம்—சுகாதாரம்—தூய்மை எங்கள் உணவில் காண்க.

---

சுத்தமான நெய்யில் எங்கள் பட்சணங்கள்
சுவைகனிந்து இன்பந்தரும்.

எஸென்ஸ் காப்பி—மல்லிக காப்பி—தேனீர்
மற்றும் பலவித பானங்களைப் பருகி
—ஆனந்தியுங்கள்.—

**தில்லைவனம்பிள்ளை — காப்பி ஹோட்டல்**

**205, கே. கே. எஸ். றேட், யாழ்ப்பாணம்**